# சத்திய வேத பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA. | 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது | Telephone: No. 300.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

83-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1958-ம் ஆண்டு மாசிமாதம் 20-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 7-ம் இலக்கம்


# மத அடிப்படைக் கல்வி பண்பும், நேர்மையும்

## உள்ளபலரைப் பாருக்களித்துள்ளது

### அரசினர் மத ஸ்தாபன பாடசாலைகளை எடுப்பது கொடுங்கோன்மையாகும்

"சுமார் இரு நூற்றுண்டுகளுக்கு முன்னர் கத்தோலிக்க மத ஸ்தாபனத்தாரால் நிறுவப்பட்ட பழம்பெருமைவாய்ந்த கல்லூரிகளிற் சம்பத்திரிசியார் கல்லூரியுமொன்றகும். இக்கல்லூரியில் பயிற்றப்பட்ட மதஅடிப்படைக் கல்வியானது பண்பும், நேர்மையுமுள்ள மக்கள்பலரை இப்பாருக்களித்துள்ளது. மத ஸ்தாபனங்களால் நடாத்தப்படும் பாடசாலைகளை அரசாங்கம் எடுப்பது கொடுங்கோன்மையாகும்."

இவ்வாறு யாழ்நகரமேயர், திரு. பி. காசிப்பிள்ளை அவர்கள் மாசி12-ந் திகதி புதன்கிழமையன்று சம்பத்திரிசியார்கல்லூரி, விஞ்ஞான – கைப்பணிக் கண்காட்சியைத் திறந்து வைத்துச் சொற்பொழிவாற்றுகையிற் குறிப்பிட்டார்.

மேலும் தொடர்ந்துபேசுகையில், அரசாங்கம் தன்வசமுள்ள பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதையும், புதியபாடசாலைகளைத் தாபிப்பதையும் நாம் வரவேற்கிறோம். ஆனால், மத தாபனபாடசாலைகளைத் தனது நிருவாகத்தின்கீழ்க் கொண்டுவருவதையே வெறுக்கிறோம். அது கொடுங்கோன்மையுமாகும். அம்முயற்சியை, முழுப் பலத்துடனும் ஒன்றுகூடி நாம் எதிர்க்கவும்வேணடும்.

இன்னும், அரசாங்கசேவையைப் பொறுத்தமட்டில் நமது இளைஞருக்குக் கிடைக்கும் வசதியும்வாய்ப்பும் மிகமிகக்குறைந்துவிட்டது. பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு அரசாங்கஉத்தியோகங்களைநம்பி எதிர்பார்த்துக் காத்திராமல் அவர்களைத்தொழிற் நுட்பக்கல்வித்துறைகளில் பயிற்றுவிக்க முன்வரல்வேண்டும். இஃது இயந்திரயுகமாயிருப்பதால் இயந்திரத்தொழிற் கலையறிவையும் நமது பிள்ளைகளுக்குக் கற்பிப்பது மிகவும்அவசியமாகும்என வுங்குறிப்பிட்டார்.

—(ㅅ)—

# இந்த மங்கை யார்?

## சிவப்பு வர்ண இரகசியம் யாது?

முதலில் அவள் பிரசித்தமான ஓர் பாவியாய் இருந்தாள். ஆனால், பிறகு மனந்திரும்பிப் பெரியபாக்கியவதியும் அர்ச்சியசிட்டவளுமானாள். இந்தமங்கை யார்? அவள்தான் மரியமதலேனாள். அவள் தனது படங்களிலெல்லாம் சுருண்டுநீண்ட அழகான கூந்தலோடும், வெண்கல் சிமிழ் ஒன்றை ஏந்தியகரத்தோடும் ரூபலாவண்ணியமுள்ள ஓர் ஆரணங்காகக் காட்சியளிக்கின்றாள். தனது வாழ்க்கையின் மாறுதல்களைக் காண்பிக்கும் அறிகுறியாக அவள் மூவர்ண ஆடைகள் தரித்திருக்கின்றாள். அவற்றிலே சிவப்பு அவளுடைய பாவவாழ்க்கையும், ஊதா அவளுடைய தபவாழ்க்கையும், மேகவர்ணம் அவளுடைய மாறாத திட பத்தியுள்ள வாழ்க்கையையும் விளங்கவைக்கின்றன. அவள் மரியமதலேனாளென்று அழைக்கப்பட்டாள். இருநாமங்களிலும் ஒன்றை உலகம் அவளுக்குக் கொடுத்தது. கிறீஸ்துநாதர் மறுநாமத்தை அவளுக்குச்சூட்டினார்.

மதலேனாளது வாழ்க்கையின் உடைகளிலே சிவப்புவர்ணம் பாவம்நிறைந்த அவளது சீவிய சரித்திரத்தைச் சித்திரித்துக் காட்டுகின்றது. பெத்தானியா எனும் பட்டினத்திலே மதலேனாள் காமவிகாரங்களுக்கும், சிற்றின்ப சுகபோகங்களுக்கும் ஓர் எடுத்துக்காட்டாய் விளங்கினாள். தனது பாவச்செயல்களையிட்டு அவள் மகிமைபாராட்டினாள். எந்த ஆடவனையும் தன்னால்மயக்கிக் கெடுத்துவிட முடியுமென்று மமதையாகப் பேசிவந்தாள். ஆனால், அவள் வீதியில் நடந்து போகும்போது, அவளைக் கடந்து செல்லும் மாதர்கள் தாங்களும் அசுத்தப்படலாமென்று அஞ்சித் தங்கள்உடைகளைக் கொய்து ஒதுங்கிச்செல்வார்கள். பெற்றோர் தங்கள் பிள்ளைகள் குழப்பஞ் செய்யும்போது மதலேனாளிடம் பிடித்துக்கொடுத்துப் போடுவதாகச்சொல்லி அவர்களைப் பயமுறுத்துவார்கள். இந்தவிதமான நிலைமையிலே மதலேனாள் அந்தப்பெரிய அற்புதவரத்தரைப் பற்றி அறியவந்தாள். செந்தூரியானின் ஊழியனை அவர் எவ்வாறு குணமாக்கினாரென்ற சம்பவத்தையும் அவள் கேள்விப்பட்டிருந்தாள். இது அவரைக்காண வேண்டுமென்ற ஆர்வத்தை அவள் மனதில் பிறப்பித்துவிட்டது.

எத்தனையோ ஆடவர்களைத் தனது சிற்றின்ப மாயவலையில் சிக்கச்செய்து கெடுத்துவிட்ட மதலேனாள் கிறீஸ்துநாதரையுமே அவ்வாறு தன்னால் கெடுத்துவிட முடியுமென்று தனது உள்ளத்தில் எண்ணியிருப்பாளெனப் பாரம்பரியம் கூறுகின்றது. ஏனெனில், அவரைச் சந்திப்பதற்கென்று நெடுநேரமாய்த்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

# அங்கும் இங்கும்

### உரிமையுடன் கேளுங்கள்

"உங்களை நீங்கள் உயர்த்துவதற்கு உங்கள் சங்கங்கள்மூலம் வழிவகைகளைத் தேடவேண்டுமேயொழிய மற்றவர்களைநம்பி வாழக்கூடாது. இரந்து உரிமைபெற்றசமூகம் எத்தேசத்திலும் இல்லை. முஸ்லீம்மக்களுக்குக் கொடுக்கும்கல்விச்சலுகை தாழ்த்தப்பட்ட மக்களென்று கருதப்படும் உங்களுக்கும் வேண்டுமென்று இரந்துகேட்க வேண்டாம். உரிமையுடன் கேளுங்கள்."

திரு. பொ. கந்தையா,
பருத்தித்துறை, எம். பி.

### இன்று உணருகின்றனர்

"மொழிப்பிரச்சினை சம்பந்தமாக மக்களிடையே கருத்துவேற்றுமை நிலவியது உண்மையே. ஆனால், அக்கருத்துவேற்றுமை எவ்வளவு தூரம் நியாயமற்றதென்பதை மக்கள்இப்பொழுது உணரத்தொடங்கிவிட்டனர். இற்றைக்கு ஆறுஏழுமாதங்களின் முன் மொழிப்பிரச்சினைபற்றிய ஒருவரின்கருத்தை மக்கள்உணரச்செய்வது மிகவும்கஷ்டமானதாக இருந்தது."

டக்டர் என். எம். பெரேரா,
எதிர்க்கட்சித் தலைவர்.

### அன்றும் இன்றும்

"இலங்கைத் தமிழ்ப்பேசும்இனத்தின் எதிர்காலம் பண்டாரநாயகா-செல்வநாயகம் ஒப்பந்தத்தில்தான் இன்று தங்கியுள்ளது. அன்று அரசுரிமையுடன் வாழ்ந்ததமிழர் இன்று அடிமைகளாய் வாழவேண்டியிருக்கிறது. இலங்கைத்தமிழரைப் பொறுத்தவரை இன்னும் எமக்குப் பூரணசுதந்திரம் கிடைக்கவில்லை."

திரு. சு. நடராசா,
தமிழரசுக்கட்சி வாலிபமுன்னணி
முன்னைநாள் தலைவர்

### எவரும் மறுக்கமுடியாது

"சட்டம் அங்கீகரித்தாலும், அங்கீகரிக்காவிட்டாலும் எங்களைப்பொறுத்தவரை இலங்கையில்உள்ள இந்திய வமிசாவழியினர் இலங்கைப்பிரசைகள் தான். தேசியவளத்தைப் பெருக்குவதற்கு அவர்கள்தங்கள் முழுச்சக்தியையும் அர்ப்பணித்து உழைத்துவருகிறார்கள். இந்தஉண்மையை இலங்கை அரசாங்கமோ அல்லது எந்தத்தனிப்பட்டவரோ மறுக்கமுடியாது"

திரு. எஸ். தொண்டமான்,
இந்திய ஜனநாயககாங்கிரஸ் தலைவர்.

### பெரும் தொண்டாகும்

"நாட்டின் பொருளாதார சுபீட்சத்திற்கு ஆசிரியரும், மாணவரும் குடிசைக்கைத்தொழிலில் ஈடுபட்டுழைக்க வேண்டும். சுயதேவையைப் பூர்த்தி செய்துகொள்வதற்கும், எதற்கும்அரசாங்கத்தை எதிர்பார்க்காது சொந்த முயற்சியில் நம்பிக்கையோடு வாழக்கூடியவர்களாய் மாணவர்களை ஆசிரியர்கள் பயிற்றுவார்களானால் அது சமூகத்துக்குச்செய்யப்படும் ஒரு பெருந் தொண்டாகும்"

திரு. எம். ஸ்ரீ கந்தா,
வடமாகாண அதிபர்.

### நான் தகுதியற்றவன்

"பாடசாலைகளில் இனிமேல் வேலைநிறுத்தங்கள் நடைபெற்றால் அவை வெகுசிரத்தையுடன் கவனிக்கப்படும். ஆசிரியர்கள் இவைகளிற்கலந்துகொண்டால் அவர்களை வேலைநீக்கஞ்செய்ய இனிநான் தயங்கமாட்டேன். மேலும், அரசாங்கம் ஆசிரியர்களுக்குச் செய்துள்ள நன்மைகளைச் சிலஆசிரியர்கள் புறக்கணித்து வருகின்றனர். நன்றிகெட்ட இவர்களது நடத்தைக்குத் தகுந்த சிகிச்சை கொடுக்காவிட்டால் நான் இப்பதவிக்குத் தகுதியற்றவன்."

திரு. டபிள்யு. தஹநாயகா,
கல்விமந்திரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## LOURDES

Hail Lourdes! Heav'n's antechamber, Hail!
Thou Mary's home and pow'rhouse, Hail!
Whilst Heav'n and earth acclaim'd, HER NAME
IMMACULATE didst thou proclaim.

Thou Mary's city, none like thee,
What wondrous things are done in thee!
Thou pride of new Jerusalem,
Crowned with Queen Mary's diadem!

Thou Mary's mount, Her voice from there
Fills all earth's confines to declare:
That Prayer and Penance are Gospel way—
Behest to heed through life's long day.

Bethsaida blest in Mary's hand
Whose waters move at Her command;
To faith's approach there cures are made
For God's own glory and man's aid.

Thou solid bastion of our Faith,
Our Refuge safe—the Church so saith—
Pray, Mary crush that Serpent's head
Th' infernal Foe whom we so dread.

See pilgrims myriad swarm thy place,
To seek from Mary health and grace;
O'er hill and dale they hymn her praise,
From distant clime our hearts we raise.

Lourdes Mother bid all tempests cease,
The world in peril sighs for Peace;
All things in Christ the more renew,
Avert God's vengeance rod now due.

*Cor—Jaffna.*

# தமிழ்மொழிக்கு வரையறையற்ற சேவைபுரிந்த இருவர்

### அர்ச். அடைக்கலநாயகி பாடசாலையில் நடந்தேறிய வீரமாமுனிவர் – ஞானப்பிரகாசர் நினைவுவிழாவில் ஆற்றிய சொற்பொழிவுகள்

**"சுவாமி ஞானப்பிரகாச அடிகள் கத்தோலிக்க சமூகத்திற்குத் தூண்போல இருந்துகொண்டு தமிழ்மொழிக்குச் செய்த சேவை வரம்பிலே அடங்காது. எழுத்திலே அடங்காது. 18-ம் நூற்றூண்டிலே வீரமாமுனிவர் எல்லாக் கலைகளையும் கற்றுணர்ந்து தமிழ்மொழியின் பெருமையை உய்த்து உணர்ந்த அந்தக்காலமே தமிழ்மொழி மலர்ச்சியுற்றகாலமாகும்."**

தமிழர் அறநெறிக் கழகத்தின் சார்பில் கடந்த 26-1-58 ஞாயிறன்று தமிழ்வளர்த்த வீரமாமுனிவர், சுவாமி ஞானப்பிரகாசர் ஆகியோரின் நினைவு விழா வைபவம் அர்ச். அடைக்கலநாயகி பாடசாலை மண்டபத்தில் நிகழ்ந்தபோது பண்டித இளமுருகனாவர்கள் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். கட்டளைக்குரவர் வண. சுவாம்பிள்ளை சுவாமியவர்கள் தலைமைவகித்துப் பேசுகையில், தமிழர் அறநெறிக் கழகத்தினுடைய தமிழ்த்தொண்டிற்குச் சாதி, சமய, அரசியல் பேதமின்றிச் சகலருடைய உதவியும், ஒத்துழைப்பும் இருந்தால்தான் தமிழர் அறநெறிக் கழகம் முன்னேறமுடியும் எனக் கூறிநின்றார்.

பண்டித இளமுருகனார் தமதுசொற்பொழிவில் மேலும் கூறியதாவது:

"தமிழுக்குச் சிறப்பாக—கண்ணிய மானவரம்பாக வீரமாமுனிவர் இயற்றிய சதுரகாதி போன்ற நூல்கள் விளங்குகின்றன. தமிழ்மொழியின் பெருமையைத் தான் மட்டும் அறிந்தாற் போதாது; மேல்நாட்டு மக்களும் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகக் 'கொடுந்தமிழ்' என்ற பெயரில் ஆங்கிலமும், தமிழுஞ் சேர்ந்த அகராதியை அமைத்தார். தமிழன் பண்பையும் காட்டக்கூடிய மக்கள் இலக்கியமாகத் தேம்பாவணிப் பாடல்கள் போன்ற அவரது கவிதைகள் அமைந்துள்ளன. சொற்கலைப் புலமை மிக்கவராய் விளங்கும் ஞானப்பிரகாச சுவாமிகள் செய்த நுட்பமான தமிழ்ச் சொல்லாராய்ச்சிகள் இலகுவான முறையில் எவராலும் செய்துகொள்ள முடியாதனவாகும். இவ்விரு பெரியார்களும் துறவிகளாக இருந்து சமயத்திலே ஊறியிருந்தபடியினால்தான் அவர்களுடைய சமயத்தொண்டு தமிழ்ப்பணிக்குப் போற்றலை அளித்தது."

வித்துவான் வேந்தனார் பேசுகையில் குறிப்பிட்டதாவது: "அரசியலுக்காகவும், மொழிப்பிரச்சினைக்காகவும் மேடைஏறும் இக்காலத்திலே தமிழ்ப் பெரியார்களின் விழாக்களைக் கொண்டாடமுன்வந்திருக்கும் இக்கழகத்தினரைப் பெரிதும் வரவேற்கிறேன். மேலும், யாழ்ப்பாணத் தமிழ்மக்களிடையே பிறந்து, தமிழையே பேசித் தமிழ்ச் சொற்கலைப் புலவராக விளங்குபவர் சுவாமி ஞானப்பிரகாசர். தற்காலத்தில் தமிழின் உண்மையான உருபை, உருவத்தை, ஓசையை, தமிழ்நடையை மறந்து எழுதுவதில் பிரபலமடைந்த பத்திரிகைகளின் முறையிலே, தமிழ்நடை கையாளப்படும் வகையிலே சுவாமி ஞானப்பிரகாசர் தமிழ்த்தொண்டு செய்திருந்தால் அவரைத் தமிழ் உலகம் அறிந்திருக்கும். ஆனால், அவர் அவ்விதமாகத் தமிழ்த்தொண்டு செய்யாது தமிழ் இலக்கண மரபு குன்றாத வகையிலே, தமது புகழ் தோன்றாத முறையிலே தமிழ்த்தொண்டு செய்தார்."

பண்டிதர் ஆசிநாதன் அவர்களும் பேசினார்.


## TUITION
IN
### Shorthand-Typewriting and Music

**Shorthand:** Pitman's Phonetic System
**Typewriting:** Vertical Touch Method
} Theoretical course and Advanced Level

Students (boys and girls) prepared for Pitman's London, London Chamber of Commerce and other Examinations.

**Shorthand Speed Training a Speciality**

Several students already trained are in Govt. Service, Business Firms and other Institutions in Ceylon and India.

**Church Music:** English and Plain-Chant (Gregorian)

**Individual attention paid to each student.**

**JOSEPH ANDREW,**
"De Mazenod", 4th Cross Street, Jaffna.


✝

### 2-ம் வருட மரணஞாபகம்

| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 23—9—1923 | 25—2—1956 |

இம்மண்ணுலகினின்று இருவருடம் மறைந்தாலும் எம் மனவுலகினின்று என்றைக்கும் மறையாத எனது அருமைத் தங்கையும், எனது அரிய அக்காவுமாகிய திருமதி யுபிறேசியா பீற்றர் அவர்கள் மரணத்திரையில் மறைந்த இரண்டாம் வருடம் 25-2-58 செவ்வாய்க்கிழமை பூர்த்தியடைகிறபடியால் இதைக் கண்ணுறும் கிறீஸ்துவர்கள் அனைவரையும் இவ்வாத்துமத்தை நினைவுகூர்ந்து மன்றாடிக்கொள்ளுமாறு தயவுடன் வேண்டுகிறோம்.

"இரக்கமுள்ள யேசுவே! தேவரீர் திருச்சிலுவையில் தொங்கும்போது அனுபவித்த அளவில்லாத கஸ்தியைப் பார்த்து யுபிறேசியாவுடைய ஆத்துமத்தை இரட்சித்து முடிவில்லாத மோட்ச இராச்சியத்தில் பங்காளியாயிருக்கக் கிருபைசெய்தருளும் சுவாமி, ஆமென்யேசு."

அருமைச்சகோதரியை இழந்து
துயருறும் அக்கா
**எலிசபெத் வஸ்தியாம்பிள்ளை**
அன்புஅக்காவை இழந்து
துன்புறும் தங்கை
**ஞானபுஷ்பம் அந்தோனிப்பிள்ளை**
பாண்டியந்தாழ்வு, 18-2-58

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

பரிசுத்த சதாசகாயமாதாவிடம் நாங்கள் நம்பிக்கையுடன் இரந்துகேட்டசகாயம் கிடைத்தபடியால் நேர்த்திப்படி இதனைப்பிரசுரிக்கிறேன். இன்னும் எங்களின் கஷ்டங்களை நீக்கியருளுமாறு அவளை இரந்துகொள்ளுகிறோம்.

Mr. & Mrs. Vaganam & Family

### கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 1506**

**யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில்**

மண்டைதீவு
சின்னத்தம்பி மாணிக்கம்
— வழக்காளி.

எதிராக
மண்டைதீவு
வைரமுத்து குமலிங்கமும்,
பெண் மங்களமும்
— எதிராளிகள்.

யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டின் M. B. 1506-ம்இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னல்விபரிக்கப்படும் 3 துண்டுக்காணிகளை 1958-ம்ஆண்டு பங்குனிமாதம் 22-ந்திகதி சனிக்கிழமை முற்பகல் 10மணிதொடக்கம் அந்தந்தக்காணிக்குள்நின்று பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 848-75-உம், 22-2-57 தொடக்கம், 2-12-57 வரைக்கும் ரூபா 500-க்குப் 15% வட்டியும், அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5%வட்டியும், கோட்டுச்செலவும்.

### காணிகள் விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் தீவுப்பகுதி அல்லைப்பிட்டிக் கோவிற்பற்று, மண்டைதீவுஇறை 'சங்குட்டி' நி. பர. 7½-உம், கிணறும். எல்லை: கிழக்கு — செல்லப்பா தம்பியப்பாவுக்குரிய ஆதனம். வடக்கு — சுப்பிரமணியர் கணபதிப்பிள்ளையின் உரிமைக்காரருக்கும், மறுபேருக்கும் உரிய ஆதனங்கள். மேற்கு — செல்லப்பா கைம்பெண் சின்னப்பிள்ளைக்குரிய ஆதனம். தெற்கு — பஸ்குவால் செவ்வயித்தியின் உரிமைக்காரருக்கும், மறுபேருக்குமுரிய ஆதனங்கள். இதடங்கலிற் சொரியலாய் நி. பர. 5-ல், ⅓பங்கும், அதற்குரியவைகளும்.

2. ஷை இறை "ஊரிக்காடு" நி. பர. 12-உம், பனைகளும், வடலிகளும். எல்லை: கிழக்கு — கதிரவேலு ஏரம்பமூர்த்திக்கும், சின்னத்தம்பி இளையகுட்டிக்கும் உரியஆதனம். வடக்கு — செல்லத்தம்பி செல்லப்பாவின் உரிமைக்காரருக்கும், மறுபேருக்குமுரிய ஆதனங்கள். மேற்கு — வீரகத்தி விசுவநாதரின் உரிமைக்காரருக்குரிய ஆதனம். தெற்கு — முகப்புவயல் சுப்பிரமணியசுவாமிகோவிலாதனமும், சிதம்பரப்பிள்ளை கைம்பெண் நாகமுத்துவுக்கும், பங்காளருக்குமுரிய ஆதனம். இதடங்கலிற் சொரியலாய் ½வாசியும், அதற்குரியவைகளும்.

3. ஷை இறை "உந்துபற்று" நெ. பர. 3¾-உம், கிணறும். எல்லை: கிழக்கு— குளம். வடக்கு — ஒழுங்கை. மேற்கு— கணபதிப்பிள்ளை கைம்பெண் பொன்னுச்சிக்கும், பங்காளருக்குமுரிய ஆதனம். தெற்கு— கணபதிப்பிள்ளை சிவலிங்கபிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள். இதடங்கலும்.

**டி. என். ஆசீர்வாதம்,**
கொம்மிஷனர்

நம். 21, 2-ம்குறுக்குத்தெரு,
குருநகர், யாழ்ப்பாணம்.
8-2-1958

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் ஆசை மகனே

அப்பா! உங்கள் அமுதமொழிகள் நிறைந்த அருமை இதழ் கண்டேன். பரவசமடைந்தேன். அதனைப் பிறருங்கண்டு பெரும்பயன் பெறவேண்டுமென்ற பேரவாவாற் பிரசுரிக்க விரும்பினேன் மன்னியுங்கள்.

என் ஆசைமகனே!

உன்மட்டில் நீ பூரணமாய் மரித்துவிடு. உன் உள்ளத்தில் வீணான கவலைகொண்டு உருக்குலைந்துபோகாதே. அப்பொழுது தான் தெய்வீகஇன்பங்களைச் சிறிதாவது சுவைத்துச் சுகிக்கமுடியும். பரலோகதியானத்திற் கொஞ்சமாவது தேர்ச்சியடைவதற்குச் சிறந்தபாதை இதுதான்.

எதிர்ப்படும் சிறுசிறு இடையூறுகளைக்கண்டு அதைரியமடைந்து மனிதஆறுதல்களைத் தேடியோடாதே. தைரியசாலியைப் போலப் போர்க்களத்தில் நிற்கப்பிரயாசப்படு. சர்வேசுரனுடையபேருதவி பரலோகத்தில் நின்றிறங்கிவருதலைக் காண்பாய். தமது அனுக்கிரகத்தின்பேரில் நம்பிக்கைவைக்கும் போர்வீரர்களுக்குத் தேவன் உதவிபுரிய எப்போதும் ஆயத்தமாயிருக்கிறார்.

உன் துர்ப்பழக்கங்களையும், பழையசெயல்களையும் விட்டுவிட்டுப் புனிதவழியில்நடப்பது சற்றுக்கடினமாகவே இருக்கும். ஆயினும், அற்பமும், சுலபமுமானவற்றை நீ வெற்றிகொள்ளாவிட்டால் அதிகவருத்தந் தருவனவற்றை எப்படிவெல்லுவாய்? நீ நன்னெறியில் பிரமாணிக்கமாய் நட. அதனால், உனக்குச்சாந்தியும், பிறருக்குச் சந்தோஷமும் உண்டாகும்.

பிறரால் பெருந்துன்பங்கள் வருகின்றனவென்று வருந்திஎழுதினாய்.

மகனே! பிறராலேற்படும் துன்பங்கள் பெரும்பாலும் நாம்தாழ்ச்சிபெற உதவுகின்றன. வீண்பெருமைகளினின்றும் நம்மைக் காக்கின்றன. வெளியரங்கமாய் மனிதர் நம்மைநிந்திக்கும்போது நமதுள்ளத்தில் சர்வேசுரனைச்சாட்சியாகவைப்பது எளிதல்லவா? மனிதனைவிட்டுக் கடவுளிடத்தில் உன்னை உறுதிப்படுத்திக்கொள். குறைவற்ற பூரணஅமரிக்கையும், சமாதானமும் உலகத்தின் கையிலில்லை. தேவனிடம் ஒன்றிக்கும் போதுதான் அவற்றை முழுமையாய்க் காண்பாய்.

இவ்வுலகதுன்பங்கள் நித்திய சீவியத்தின் அடையாளங்கள். அவை புண்ணியத்தில் நம்மைப் பழக்கி வளர்க்கின்றன. நமது பேறுபலன்களை அதிகரிக்கச் செய்கின்றன.

"பூலோகத்தில் மனிதனுடைய சீவியம் தந்திரச்சோதனைதான்" என்று யோபாகமம் கூறுகின்றது.

உலகத்துக்கு மரித்து உறுதியாயிரு, வெற்றிகாண்பாய்.

உனது அன்பு நிறைந்த
அப்பா

—(⌣)—

# முத்தர்களின் குற்றங்கள்

உலகத்திலுள்ள எந்தவிடயத்தையும் இருபுறமாக நோக்கலாம். சிருட்டிகள் அனைத்திற்கும் கடவுளே ஆதிகாரணராகையால் மூலாதாரமாக அவைகள் நன்மையும், விரும்பத்தக்கனவுமானவை. எனினும், அவை ஒன்றுமின்மையிலிருந்து சிருட்டிக்கப்பட்டபடியால் எல்லாவற்றிலும் குறைபாடு உண்டு.

மனிதன் "தேவசாயலாய்ச் சிருட்டிக்கப்பட்டிருக்கிறபடியால்" நன்மையை விரும்பத் தக்கவன். உண்மையாகவே தேவ அருட்பிரசாத அந்தஸ்திலிருக்கும் ஓர்ஆத்துமம் எத்தனை அழகு நிறைந்திருக்கிறதென்றால், அதைக்கண்ட அர்ச். கத்தரீன் அம்மாளைப்போல நாமும் பரவசங் கொள்ளுவோம். எனினும், மனிதன் முன் சூனியமாயிருந்தவனுகையால் அற்ப குறையாவது காணப்படுவது நிச்சயம். கடவுளுடைய சிருட்டிப்பாயினும் உலகத்தில் மனிதரில்குற்றமுண்டு.

இதற்கு விதிவிலக்குத் தேவதாயார் மாத்திரமே. அவர் அற்பமேனும் குற்றமில்லாத பூரண சிருட்டி. மாசற்றவரும் அற்ப குற்றங்களால்தானும் தாக்கப்படாதவர். அவர்மாத்திரமே "எவ்வகையானுஞ் சிறப்புடையள் என்அன்பு; அமைப்பில் என்றும் குறைவிலாள்" என உன்னத சங்கீதம்வர்ணிப்பவரும் அவரையே

மற்றெந்தச்சிருட்டியிலும் எத்துணை உத்தமதனம் நிறைந்ததாயினும் குறைகாணமுடியும். குற்றமில்லையெனக் கூறுபவனும், நிறைவேயுண்டு என்பவனும் பொய்யர். பரிசுத்தனிடத்திற் பழுப்புஉண்டு; துட்டனிடத்திலும் சிலநற்பண்பு காணலாம். தேவசாயலாய்ச் சிருட்டிக்கப்பட்டவனிடம் அச்சாயல் துலங்கும்; ஒன்றுமின்மையாகையால் குறைபாடும் விளங்கும்.

அர்ச்சியசிட்டரின் புண்ணிய ஒழுக்கங்களை மாத்திரமல்ல அவர்களுடைய குற்றங்களையும் எடுத்துக்கூறுவதினால் அவர்களுடைய மதிப்பை நாம் குறைப்பதில்லை. அக்குற்றங்களை மறைப்பதாலோ, கூருமல் விடுவதாலோ சரித்திராசிரியர் அர்ச்சியசிட்டருக்கு அநீதி செய்கிறார்.

அர்ச்சியசிட்டர் வேறுஅர்ச்சியசிட்டரின் சரித்திரத்தை எழுதும்பொழுது அவர்களிடங்கண்ட சிறுகுற்றங்குறைகளை எழுதாமல் விடவில்லை. அப்படி எழுதுவதினால் தாம் அத்தூயோருக்கு நன்மையே செய்கிறதாக எண்ணினார்கள்.

அர்ச். போலாவின் சரித்திரத்தைஎழுதிய அர்ச். ஜெரோம் அவளுடைய புண்ணியமாதிரிகைகளுடன்சிறுகுற்றங்களையும்கூறியிருக்கிறார். அவளுடைய செயல்களிற் சிலவற்றை உள்ளபடி குற்றமெனக்கடிந்து குறைநிறைகளை உண்மையின்படி கூறியிருக்கிறார். கூறுவது பிரயோசனமானதென உணர்ந்தார்.

அர்ச்சியசிட்டருடைய வாழ்க்கையிலே குறைகாணுவது நல்லது. அவைகளைக் கடவுள் எப்படி மன்னித்தார் என்றுணர்ந்து கடவுளுடைய நன்மைத்தன்மையை அறிகிறோம்; அக்குற்றங்களைத்திருத்த அர்ச்சியசிட்டர் செய்தமுயற்சியையும், கைக்கொண்ட தபத்தையும் காணுகிறோம். புண்ணியங்களைப் பின்பற்றவும், விலக்கவும் நாம் கற்றுக்கொள்ளுகிறோம்.

அர்ச். அந்தோனியார் வனப்பிரஸ்தரானபோது வனாந்தரத்திலிருந்த மற்றத் தபோதனரைப் பார்வையிடுவதற்காகச் சென்றார். அவர்களுடைய புண்ணியங்களைப் பார்த்துத்தானும் பின்பற்ற விரும்பியதுமாத்திரமல்ல, அவர்களிடமுள்ள குறைகளையறிந்து தாமும் அவைகளைவிலக்க விரும்பினார். அதனால் பெரிய உத்தமனானார்.

அர்ச்சியசிட்டருடைய குற்றங்களைக் கண்டுநாம் இறுமாப்புக் கொள்ளக்கூடாது. அவர்கள் குற்றஞ்செய்திருந்தால் நாம் எம்மாத்திரம்? மெய்தான். ஆகவே, அக்குற்றத்தை நாம் செய்யலாம் என முடிபுசெய்தல்தவறு. எம்முடைய குற்றங்களைக் களையமாட்டாமல் நாமிருக்க, பிறருடைய குறைகளையும் நாம் ஏன் எம்தலையில் சுமத்தவேண்டும்.

எமதுசிலுவையைச்சுமந்து எம் இரட்சகரைப் பின்செல்லுவதே எம்உத்தமதனம். "தம்முடைய அழிவை நாடுபவருக்குச் சிலுவையின் போதம் மடமைத்தனம்; இரட்சணிய பாதையிற்செல்லும் எமக்குக் கடவுளின் வல்லமையாகும்; எனும் சம்பாவிலுகூற்றை நாம் மனத்திருத்தவேண்டும்.

# நீந்திஎடுத்த நித்திலங்கள்

- நாம் எவ்வளவு தவறியிருப்பினும் பரவாயில்லை. தேவனின்அன்பு ஒருபோதும் ஒழிவதில்லை.
- உறுதியான விசுவாசம் உறுதியான வாழ்வுக்கு வழிநடத்துகின்றது.
- நம்வாழ்வையும், கடமைகளையும் கடவுளுக்கு ஒப்படைப்பதே உண்மைச்செபமாகும்.
- தேவனுடைய இராச்சியத்தைப் பரப்புவதற்கு நாம் வீடுகளைப் பயன்படுத்துவோம்.
- அமைதியாயிருப்பதில்தான் வல்லமையுண்டு.
- எல்லாம் நன்றாகஇருக்கையில் தேவனைத்தேடு. துன்பம் வரும்போதும் அவர் துணைச்செய்வார்.
- விரோதியின் நிலைக்கு என்னை ஒருவன் கொண்டுவர நான் அனுமதிக்கமாட்டேன்.
- கடவுளின் இரக்கத்தைநினைத்துத் துதிக்கும்போதுதான் நாம் சூரிய வெளிச்சத்தில் வாழப்பழகுகின்றோம்.
- தேவனுடைய இராச்சியம் உள்ளத்தில் இருக்கின்றது.
- மற்றவருக்கு உதவிசெய்கிறதென்றால் என்ன? துன்பத்தைக் கண்டு இரங்குகின்றநாம் தேவனைப் பின்பற்றுவதாகும்.
- கடவுளைக் கேளாமலும், அவரோடு பேசாமலும்இருந்தால் வாழ்வு எவ்வளவு சலிப்பையும், துன்பத்தையும் தருகிறது.
- ஞானத்தைத்தேடு. அது உன்னை மேன்மைப்படுத்தும். மகிமையான முடியை அது உனக்குச் சூட்டும்.
- ஏழையின்கூக்குரலுக்குத் தன் செவியை அடைத்துக் கொள்ளுகிறவன் தானும் சத்தமிட்டுக் கூப்பிடும்போது கேட்கப்படமாட்டான்.
- சிநேகிதன் அடிக்கும்அடிகள் உண்மையானவை. சத்துருவின் முத்தங்கள் வஞ்சனையுடையவை.
- இறைவனின் ஏழைக்கோலம் எங்களைச் செல்வர்களாக்கியது.
- நான் உயிருள்ளபோதே என்னைப்படைத்தவரைத் துதிப்பேன்.

தொகுப்பு : "சாந்தி"

## 1960-ல்
## சற்பிரசாத மாநாடு

முப்பத்தேழாவது சர்வதேச சற்பிரசாதமாநாடு மியுனிக்கில் 1960-ம்ஆண்டு ஆடி 29தொடக்கம் ஆவணி 5வரை நடக்குமெனப் பரீட்சார்த்தமாக நியமிக்கப்பெற்றிருக்கிறது. இத்திகதிகளைச் சர்வதேசகொம்மிற்றி அனுமதிக்க வேண்டும். மியுனிக் உதவிமேற்றிராணியார் கூறும்பிரகாரம் இம் மாநாட்டின்விடயம் "உலகவாழ்விற்காக" ஆகும்.

**லட்சம் யாத்திரிகர்கள்**

உலகத்தின் பலபாகங்களிலுமிருந்து ஒருலட்சம் யாத்திரிகள் இந்தச் சற்பிரசாதமாநாட்டில் பங்குபற்றுவார்கள்என எதிர்பார்க்கப்படுகிறது.

முந்தியமூன்று நாட்களும் ஆராய்ச்சியில் செலவிடப்பெறும். நான்காம்நாள் பாப்பரசரின்பிரதிநிதி வரவேற்கப்பெறுவர். வேதகலாபனையில் அகப்பட்டிருக்கும் நாடுகளுக்காக வேண்டுதல்செய்துமாநாட்டுக்கு முந்திய தினம் மெழுகுவர்த்தி ஊர்வலமிருக்கும். இறுதிநாளில் ஆடம்பரப்பூசையுடன் மாநாடு முற்றுப்பெறும். ஜேர்மனியில் 1909-இல் இத்தகையமாநாடு நடைபெற்றது.

## அர்ச்சியசிட்டரின் இரத்தம்உருகும் காட்சி

கி. பி. 304-ல் தியோக்கிளேசியன் சக்கிரவர்த்திகாலத்தில் வேதசாட்சியாகமரித்த அர்ச். ஜனுவாரியுஸ் என்பவரின் இரத்தத்தூள் நேப்பிள்ஸ் நகரமேற்றிராசன ஆலயத்தில் பத்திரமாக வைக்கப்பட்டுள்ளது. அந்தத்தூள் ஆண்டுதோறும் சிலதினங்களில் உருகித்திரவநிலையை அடைந்து, உயிருள்ள இரத்தம்போல் காட்சியளிக்கின்றது. அவ்வாறு சென்ற ஆண்டு புரட்டாசியில் உருகிய காட்சி சலனப்படமாக எடுக்கப்பட்டுள்ளது. இப்படத்தை இத்தாலிய தூரக்காட்சி (டெலிவிஷன்) நிலையம் அடுத்தமாதம் உலகமெங்கும் காண்பிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாசி மாதம்

**பொதுக்கருத்து:** கிறீஸ்துநாதருக்காகத் துன்புறும் அனைவருக்கும் லூர்துகெபியின் பரிசுத்தகன்னிகை ஆறுதலும், திடமும் அளிக்கும்படியாக வேண்டிக்கொள்வது.

**மிஷன்கருத்து:** சீனர்களின் சமய உணர்ச்சியை நாஸ்திகலோகாதயம் அழியாதிருக்கும்படியாக மன்றாடிக் கொள்வது.


சத்திய வேத

# பாதுகாவலன்

1958-ம் ஆண்டு
மாசி மாதம் 20-ந் திகதி


## இன்றைய உலகில் விஞ்ஞானம் வகிக்குமிடம்

சென்றவாரம் சம்பத்திரிசியார் கல்லூரியில் நடந்தேறிய விஞ்ஞான - கைப்பணிக்காட்சியானது இக்கல்லூரிச் சரித்திரத்தில் முக்கியத்துவம் பெற்றதொரு நிகழ்ச்சியாகும். பல்லாயிரக் கணக்கானமக்கள் திரள்திரளாக வந்து விஞ்ஞானக்கலைவளர்ச்சியையும், அதன் பயன்களையும் கண்ணாரக்கண்டு மகிழ்ந்துவியந்துசென்றனர். பெறற்கரியஇவ் வருந்தருணத்தைச் சாதகமாகக் கொண்டு மனிதவாழ்வுக்கும், அறிவுவிருத்திக்கும் விஞ்ஞானம் எங்ஙனம்துணைச்செய்கிறது என்பதை ஆராய்வாம். ஒருகாலத்தில் பல்கலைக்கழகங்களிலும், கலாசாலைகளிலும் மனிதசமுதாயத்தின் வரலாற்றுநூல்களும், இலக்கியநூல்களும் முதலிடம் பெற்றிருந்தன. அவை இன்று பயனற்றனவாய்க் கருதப்படுகின்றன. காலம்மாறி விஞ்ஞானம் ஓங்கிவருகின்றது. நாம்இப்பொழுது விஞ்ஞானயுகத்தில் வாழ்கின்றோம். மனிததேவைகளும் வரையின்றி வளர்கின்றன. மனிதன் அதிசுகவாழ்வையே நாடிச்செல்லுகிறான். நாம்அவ் வாழ்வை விரும்பாவிடினும் அத்தகையசூழலில் வாழவேண்டிய நிலையில்உள்ளோம். எனவே, நாம்இன்றைய உலகியலுக்கியைய நம்மை நிலைமாற்றிச் சமுதாயத்தோடு ஒன்றிவாழவேண்டியிருக்கிறது. இவ்விஞ்ஞானப்புத்துலகில் எந்தவோர் அம்சமும் விஞ்ஞானத்தொடர்பு பூண்டிருப்பதையே நாம் காண்கிறோம். பாடசாலையோ, தொழில்கமோ, சமையலறையோ எதைப்பார்ப்பினும் எல்லாம் விஞ்ஞானக்கருவிகளது உபயோகத்தொடர்போடேயே இயங்கிவருகின்றன. போக்குவரத்துநிலை, கல்வியமைப்பு, சுகாதாரவிதிமுறைகள் விஞ்ஞானத்தின் உதவியினால் முற்றிலும்மாறிவிட்டன. கைப்பணி, கைத்தொழில்களும் முன்னணிவகிக்கின்றன.

இன்னும் நமது அரசாங்கம் நம்நாட்டுக் கிருஷிகமுன்னேற்றங்கருதி இயந்திரசாதன இயக்கத்திட்டங்களை நடைமுறைக்குக் கொண்டுவந்திருக்கின்றது. இத்திட்டங்கள் பரிபூரணவெற்றியடைவதற்கு நமதுநாடு பிறநாட்டு வல்லுநர்களின் உதவிகோர வேண்டியசந்தர்ப்பம் நேர்ந்துள்ளது. எங்கள் திட்டங்கள்உருவாதற்கு விஞ்ஞானநிபுணர்களும், இயந்திரக்கலைஞர்களும், மற்றும் கிருஷிகத்தில்கைதேர்ந்த வல்லுநர்பலரும் வேண்டும். தவிர, நமதுநாட்டின் சுகாதாரநிலையும் வைத்தியர்கள் போதாமையால் தரம்குன்றி மிகக் கீழ்நிலையில் இருக்கின்றது. அங்கிலநிவிர்த்தியாக வைத்தியர்களும்பலர் தேவைப்படுகின்றனர். இனி, நம் நாட்டுக்கல்விநிலையை நோக்கின், கல்லூரிகளில் தகுந்த போதனசிரியர்கள் இன்மையால் விஞ்ஞானக்கல்வியின்தரம் தாழ்நிலையில் இருக்கின்றது. எனவே விஞ்ஞானக்கல்விவிருத்திக்கான வழிவகைகளையும் நாம்கையாளுதல் அவசியமாகும். மேலும் இலங்கைஅரசாங்கம் இவ்விஷயத்தில் முன்னேறி உயர்நிலையடையவேண்டுமானால் மாணவர் விஞ்ஞானஅறிவைப்பெறக் கல்லூரிகள், பல்கலைக்கழகங்களுக்குமட்டும் முக்கியத்துவம்கொடுத்தல் போதியதன்று; எல்லோரும் எல்லாக் கலாசாலைகளிலும் விஞ்ஞான அறிவைப் பெற வழிதிறக்கவேண்டும். இதைச்சரிவரச்செய்தால் பிரத்தியேக ஸ்தாபனங்கள் பலசௌகரியங்களை ஏற்பாடுசெய்து நாட்டின்தரத்தை உயர்த்திவைக்க இடமுண்டு. சிற்பவித்தை, கைத்தொழில் ஸ்தாபனங்கள் முதலியன இத்தேவையைப் பூர்த்திசெய்யஉதவும். இவற்றைவிட்டு எல்லோரும் கலைப்பட்டங்களையும், பதவிகளையும், உயர்உத்தியோகங்களையும் விரும்புவாராயின் நம்நாட்டில் மேன்மேலும் வேலையில்லாத்திண்டாட்டம் அதிகரிக்குமேயன்றி வேறுவிமோசனம்இல்லை. எனவே, நாம்விஞ்ஞானத்தின் அருமைபெருமைகளையும், தேவைகளையும் உணர்ந்து வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பூண்டோடழித்து விஞ்ஞானத்துறைகளில் ஈடுபட்டு நாட்டின் சுபீட்சத்தைவளர்க்கமுயலுவோமாக. இத்தகைய அறிவுவளத்தை நாட்டிற்பெருக்கச் சம்பத்திரிசியார்கல்லூரி விஞ்ஞான - கைப்பணிப் பொருட்காட்சியானது மாணவர்க்கும், பிறர்க்கும் நல்லூக்கம் அளித்துளதென்பதில் ஐயமில்லை. விஞ்ஞான-கைப்பணிப் பொருட்காட்சி வாழ்க!

---

### கருதினல்மார் திருச்சங்கம்

பரிசுத்தபாப்பரசர் அடுத்தவசந்தகாலத்திலே கருதினல்மார், அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமார்களின் திருச்சங்கம் ஒன்றைக் கூட்டுவாரென வத்திக்கானிலிருந்து அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இது புதிய கருதினல்மாரை நியமனஞ்செய்வதற்கான ஓர்திருச்சங்கமாய் இருக்குமென்று அறிவிக்கப்பட்டில்லை. செஸியின் முத். சாள்ஸ், முத். வெறுனே மாஸ்எனும் இருவருக்கும் அர்ச்சியசிட்டபட்டம் சூட்டுதற்கான வாக்கெடுப்பு இதில்நடைபெறுமென்றும், பலத்தீனிய குருமார்சபையை அடியிட்டவரான முத். வின்சென்ற் பலத்திக்கு அர்ச்சியசிட்டபட்டம் சூட்டுவதற்கான வாக்கெடுப்பும் இதிலேஒருவேளை நடக்கக்கூடுமென்றும் திருச்சடங்காசார திருச்சங்கத்தின் உதவிக்காரியதரிசியான மொன்சிஞ்ஞோர்என்றிக்கோ டன்ரிதெரிவிக்கின்றார்.

---

**சதாசகாயமாதா கோணம்**

## நான் நோவனைக்குப் போகக் கனவிலும் எண்ணவில்லை



நான் ஒருநாள் புகைபிரதத்தில் பயணம்பண்ணும்போது ஒருவரை அறிமுகப்படுத்திக்கொண்டேன். நாங்கள் பலவிஷயங்களைப்பற்றிச் சம்பாஷித்தோம். அதில் சமயமும் இடம்பெற்றது.

அவருடைய சல்லாபத்தில், யேசுநாதர் விரும்பியபடி றோமான்கத்தோலிக்கர் அவரைப்பின்பற்றிநடப்பதில்லை என்பதை என்மனதில் பதியக்கூடிய தாய்இடித்துரைத்தார். கிறீஸ்துநாதர் திரும்பஇவ்வுலகுக்கு வாரோர்ந்தால் தாம்ஸ்தாபித்ததிருச்சபையை ஏற்றுக்கொள்ள மறுப்பதுமல்லாமல் அதி தமதுதிருச்சபைதானென்று அறிந்துகொள்ளவும் முடியாதிருக்குமென்றும் எனதுநண்பர் கூறினார்.

இவர் "பென்தக்கோஸ்த்" என்னும் தூயஆவியின் சபையைச்சேர்ந்தகிறீஸ்துவர். பண்டைக்காலத்துக் கிறீஸ்துவர்களைப்போல் கிறீஸ்துவைவழிபடுகிறவர்கள் தாங்கள்தான்என்றும், தங்கள் ஆராதனை முயற்சிகள்முதலியன வேதாகம அத்தாட்சிகளினால் பெலப்படுத்தப்பட்டிருக்கின்றனவென்றும் அழுத்தந்திருத்தமாகப் பேசினார்.

இந்தச்சம்பாஷணை எனக்குமிகவும் உருசிகரமாக இருந்தது. அத்தோடு நான்அறிந்த சிலநண்பரும் இந்தச் சபையில் சேர்ந்திருந்தார்கள். அவர்களின் மேல்வரிச்சட்டமான நடத்தை என்னையும் அந்தச்சபையில் சேரவேண்டுமெனத் தூண்டியது. இந்த எண்ணத்தை நான் எனதுமனைவிக்கும், உற்ற கத்தோலிக்கநண்பர் சிலருக்கும் வெளிப்படுத்தினேன். இது என்மனைவிக்கு ஆறாத்துயரையும், என்சிநேகிதருக்கு மனக்குழப்பத்தையும் கொடுத்தது. அவர்கள் எனக்காக மன்றாடத் தொடங்கிவிட்டார்கள். சிலர் சதாசகாயமாதாவுக்கு ஏழுகிழமைநோவனைசெய்யவும் ஆரம்பித்துவிட்டார்கள்.

தேவமாதாவுக்கு அநேகநாமங்கள் உண்டு. ஆனால், எங்கள்குடும்பத்தினருக்கு அதிஉகப்பான நாமம் "புது வேதநாடுகளின் இராக்கினி" என்பதே. என்மனைவியும், மக்களும் விடாப்பிடியாக இந்தஇராக்கினியிடம் மன்றாடினார்கள். றோமான் கத்தோலிக்க சமயத்திலும்பார்க்கத் தூயஆவிக்கூட்டம் மேன்மையானது எனத்தேவன் ஒப்புக்கொள்ளச்செய்தால் அவருடைய திருச்சித்தத்துக்குத் தாம்அமைவதாகவும், எனது மனந்திரும்புதலின்பின் தாங்களும் தூயஆவிக்கூட்டத்தில் சேர்ந்துகொள்வதாகவும் கூறினார்கள். எனது மதமாற்றத்துக்கு உகப்பான நேரம் எப்போஎன நான் அங்கலாய்ப்புடன் காத்துக்கொண்டிருக்கும்போது இரக்கமுள்ள தேவன் அதிசயத்துக்குரியவிதமாய்த் தம்மைஎனக்குக்காண்பிக்கத் திருவுளமானார்.

ஒருநாள் சற்றுஓய்வு எடுக்கவேண்டுமென விரும்பினேன். அன்று சாயந்தரம் எனக்கு லீவுகொடுக்கவேண்டுமென எனதுமுதலாளியைக் கேட்டேன். வழக்கமாக அவரிடம் லீவு பெறுவது மெத்தக் கஷ்டமானகாரியம். ஆனல், அவர் ஒருவிததடையுமின்றிக் கேட்டலீவைக் கொடுத்துவிட்டார். அரைமணிநேரத்துள் வீடுதிரும்பும்நோக்கமாக நகைக்கொடையில்உள்ள ஒரு உறவினரைச் சந்திக்கச் சென்றேன். அவருடைய வீட்டுவாசலடியால் சென்ற ஒருபஸ்பண்டியில் ஏறத்தெண்டித்தேன். ஆனல், இடமில்லாமையால் என்னைஏற்றவில்லை. அன்றுபின்னேரம் முழுதும் வீணாய்ப் போகப்போகின்றதேஎன்ற கவலையோடு கொஞ்சநேரஞ் சென்றபின் வேறொரு பஸ்வண்டியில் கொழும்புக்குத் திரும்பினேன். கோட்டையில் இறங்குவதற்குப்பதிலாகக் கண்ஆஸ்பத்திரிச் சந்தியில் இறங்கினேன். ஒருமோட்டாரதத்தை அழைத்த ஞாபகம்மாத்திரம்இருக்கிறது.

சித்தசுவாதீனம்அற்றநிலையில் இருப்பதுபோலத் தோன்றியது. கார் பொறளை, சகலஅர்ச்சியசிட்டர்களின் ஆலயவாசலில் தரித்தது. அந்தஇடத்துக்கு ஏன்கொண்டுவந்தாய்எனச் சாரதியைக்கேட்டேன். அவன் என்னுடையகட்டளைப்படியே அங்குகொண்டு வந்ததாகச் சாதித்தான். ஆனல், அப்படிக்கட்டளையிட்ட ஞாபகமே எனக்கில்லை. அப்படித் தெரிந்திருந்தால் இந்தஇடத்துக்கு வாராது பாதையை மாற்றியிருப்பேன். சாரதியோடு சச்சரவுப்படுவதிற் பிரயோசனமில்லையென அறிந்ததும், அவனை அனுப்பிவிட்டு, கோவில்முகப்பிலுள்ள சிறுகடையொன்றுக்குப்போய் ஒருசெபமாலைவாங்கினேன். என்வீட்டில் இரண்டுசெபமாலைகள் வைத்திருந்தும், ஏன்செபமாலை வாங்கினேன்என்பது இன்றுமட்டும் புரியாதபுதிர்தான்.

(தொடரும்)

---

### நன்றியறிந்த ஸ்தோத்திரங்கள்

பரிசுத்த சதாசகாயமாதாவின் இரக்கத்தால் நான் வேண்டிக்கொண்ட மன்றாட்டுக் கிடைக்கப்பெற்றேன். அதற்கு என் இதயம்நிறைந்த நன்றியைத்தெரிவித்து நேர்த்திப்படி பிரசுரிக்கப்பிந்தியமைக்கு அவவிடம் மன்னிப்பை இரந்துகொள்ளுகிறேன்.

கட்டைக்காடு அ. கிருத்தோப்பிள்ளை

* * *

பரிசுத்த சதாசகாயமாதா, அற்புதவரத்தராம் அர்ச். அந்தோனியார் இவர்களின் அனுக்கிரகத்தால் எனக்குண்டான அழல்வாதம்மாறிக் குணம்அடைந்தேன். அவர்களின்நாமம் புகழப்படுவதாக. நேர்த்திப்படி பிரசுரிக்கிறேன்.

கொழும்பு எ. மரியாம்பிள்ளை

* * *

திவ்வியபாலகயேசுவின் இரக்கத்தாலும், புதுமைமாதாவின்அற்புதத்தாலும், அர்ச். றீத்தம்மாள், அர்ச். அந்தோனியார், அர்ச். பிலிப்புநேரியார் இவர்களின் மன்றாட்டினாலும் எனக்குண்டான கடும்நோய் சுகமானது. அடியேன் என்இதயபூர்வமான நன்றியைத்தெரிவித்து இதனைப் பகிரங்கப்படுத்துகிறேன். அன்பான அம்மா, தாயே! கஸ்திப்படுகிறவர்களின் தேற்றரவே! ஆதரவற்றவர்களின் தஞ்சமே! எங்கள்அனைவரையும் உமது பாதுகாப்பில் வைத்துக் காப்பாற்றியருளும். உமது திருநாமம் சதாகாலமும் புகழப்படுவதாக.

மயிலங்குடை, றோசலின் செல்வராஜா
இளவாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிழைதிருத்தம் — ஒருசந்திநாள்

பரிசுத்த பாப்பரசரது கட்டளைப்படி தேவமாதாவின் மோட்சாரோபணத் திருநாளுக்கு ஆயத்ததினம் ஒருசந்திநாள் என்பது நீக்கப்பட்டு, தேவமாதாவின் மாசில்லாத உற்பவத் திருநாளுக்கு ஆயத்ததினம் ஒருசந்தி நாளாக ஆக்கப்பட்டிருக்கிறது.

சென்றவாரக் காவலனில் வெளிவந்த நம்மேற்றிராணி ஆண்டவர் அவர்களின் தபசுகாலத் திருமுகத்தில், 2. சுத்தபோசனத்தோடு ஒருசந்தி நாட்கள்:— விபூதித்திருநாள், பெரியவெள்ளிக்கிழமை, கர்த்தர் பிறந்த திருநாளுக்கு முந்தியநாள், அமலோற்பவ மாதாவின் திருநாளுக்கு முந்தியநாள் (மார்கழி 7) எனத் திருத்தி வாசித்துக்கொள்க.



### இரண்டாவது ஆண்டுநிறைவு

யாழ்ப்பாண மேற்றிராணியாராக விளங்கியிருந்த மகாவந். ஜே. ஏ. கியோமார் ஆண்டவர் அவர்கள் பரமபதம்அடைந்தஇரண்டாவதுஆண்டு நிறைவு ஞாபகதினம் இம்மாதம் 27-ந்திகதிவியாழக்கிழமை வருகின்றதென்பதை அனைவர்க்கும்நினைவூட்டுகின்றோம். அன்றுதினம் காலை 6-30 மணிக்கு ஆசனக்கோவிலிலே அவரின் ஆன்மஇளைப்பாற்றிக்காக ஓர் துக்கப்பாடற்பூசை நிறைவேறும்.

### தலைமை ஆசிரியர்களுக்கு அறிவித்தல்

1958-ம் ஆண்டுக்குரிய பாடசாலைகளின்தவணைகள், விசேஷவிடுமுறை நாட்கள் முதலியவற்றைக் குறித்து நாம் அனுப்பியுள்ள அறிவித்தற்பத்திரத்தில் "பங்குனி 10" என்பதைப் "பங்குனி 12" எனத் திருத்திக்கொள்ளவும்.

PHILIP PONNIAH,
Gen. Manager, R. C. Schools
Jaffna, 15-2-58.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

துன்பமாகிய சமுத்திரத்தில் நான்மூழ்கியிருந்தபோது பரிசுத்த சதாசகாயமாதா, அர்ச். சூசையப்பர், கோடிஅற்புதரான அர்ச். அந்தோனியார், அர்ச். சவேரியார், அர்ச். சின்னத்தெரேசம்மாள், முத். யோசேவாஸ் முனிந்திரன் இவர்களிடம் தவறாது கேட்டுக்கொண்டதன்பேரில் நான்அடைந்த ஆத்துமசரீர நன்மைகள் மிகப்பல. இவற்றிற்காக எனதுஇதயம்நிறைந்த நன்றியைத் தெரிவித்து நேர்த்தியின்படி இதைப்பிரசுரிக்கிறேன். அவர்கள் என்றும் எம்மைக்காப்பாற்றுவார்களாக. இதைப்பிரசுரிக்கப் பிந்தியமைக்கு அவர்களின் நிறைந்தமன்னிப்பை மன்றாட்டமாக வேண்டுகிறேன்.

திருநெல்வேலி A. F. X.

## தாயே! என் துயர் தீர்த்தாட் கொள்வாய்!

— "மரிதாசன்" —

பெருமையுறுந் தாவீது குலத்துத் தோன்றிப்
பெட்பாருங் கன்னியர்கள் மடத்துச்சேர்ந்து
திருமறையின் முடிமணியா யிலங்கிநிற்கத்
தீராத வாஞ்சையெழச் சென்றுயன்று
மரியுனக்கு வொருகுடும்ப வாழ்வைத்தேடி
மாதேவன் தூதனுப்பி நின்றக்காலை
வரையறுக்க முடியாத துயர்சுமந்தாய்
வாரிதியே! என்துயரந் தீர்த்தாட்கொள்வாய்.

●

பின்னுமொரு முறைவந்து தேவதூதன்
''பிரியபூரணி யேயுன் உதரந்தன்னிற்
பொன்னுலக தேவசுதன் புதல்வனுவார்
பூதலத்திற் கன்னியரு ளாசிபெற்றுய்''
என்னவுரை செப்பியதும் ஏங்கிநிற்க
இணையில்மா தவமுனியின் ஐயங்கண்டு
பன்னரிய துயருழன்ற தாயே! அம்மா!
பாவியென் னுளத்துயரந் தீர்த்தாட்கொள்வாய்.

●

மூவுலகும் போற்றுகின்ற சுதனைப்பெற்று
முழுநிலவைப் புல்லணையின் குடிலில்வைத்து
மாகுளிரிற் கந்தலுடை போர்த்திக்காத்து
மனமிடிந்து ஏரோதன் கொல்லத்தேடத்
தூமகனை எகிப்துக்குத் தூக்கிச்சென்று
துணைவனோ டெல்லையறு துயர்சகித்த
தாய்மரியே! பாவிகளின் தஞ்சமே! என்
தாங்கரிய துயரந்தீர்த் தாட்கொள்வாயே.

●

பொங்குபுகழ் செருசலேம் நகரின்யூதர்
பொன்மகனைக் கள்வனைப்போ லிழுத்துப்போகத்
தங்கவுடல் நூறிடவே யடித்துத்தூற்றத்
தாங்கவொணுச் சிலுவைமரஞ் சுமத்திச்செல்லச்
செங்கரங்கால் ஆணிகளா லறைந்துகொல்லச்
சேயனுயிர் போக்கியபின் மடிமேல்வைக்க
அங்கமெலாம் புண்ணுகி யனலாய்வெந்த
அம்மா! என் துயரந்தீர்த் தாட்கொள்வாயே!

## விஞ்ஞான - கைப்பணிப் பொருட்காட்சி

இந்தப்பொருட்காட்சியை உருவாக்கிப் பெரும்பாராட்டுதலைப்பெற்ற ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் நன்றி. இந்தப் பொருட்காட்சியில் காணப்பட்ட உபகரணங்களையும் மற்றும்பொருள்களின் செய்கைமுறைகளையும்படித்து ஆராயவும், அவைகளைக்காட்சிப்பொருள்களாக்கவும பல மாதகாலம் இரவும்பகலும் அவர்கள் உழைக்கவேண்டியிருந்தது.

வகுப்பு அறைகளும், விஞ்ஞான கூடமும் காட்சிப்பொருள் நிறைந்ததாகக் காணப்பெற்றன. நூற்றுக்கணக்கான நிறமின்சாரவிளக்குகள், இரண்டு பிரமாண்டமான மின்சார குழாய் விளக்குகள் உட்பட, இரவைப்பகலாக்கும் வேலையில் முனைந்திருந்தன. இக்காட்சி உண்மையாகவே ஒரு உற்சாகமான சூழ்நிலையை உண்டுபண்ணினது. காதிற்கினிய கீதங்கள் நாள்முழுதும் ஒலிபரப்பப்பட்டன. இடைஇடையே சிலமுக்கியசெய்திகள் ஒலித்தன. பலர் சேர்ந்த ஒருபெரியகூட்டம் சிறுசிறு பகுதிகளாகப்பிரிந்து பொருட்காட்சியைப்பார்வையிடவந்த மக்களுக்குப்பல விதமான உதவிகளைச்செய்தது. மாணவிகள் அங்கும் இங்கும் திரிந்து தீன் பண்டங்களைவிற்று மக்களை மகிழ்வித்தனர். சாரணஇயக்கத்தார் பொருட்காட்சியின் ஒழுங்குமுறைகளை கவனித்துவந்தனர். அமெரிக்க ஸ்தாபனத்தார் அணுவின் ஆக்கவேலைகளை நான்குஉபகாரணங்கள்மூலம் விளக்கியிருந்தனர்.

இந்தப் பொருட்காட்சி 12-ந்திகதி புதன்கிழமை மாலை 6மணியளவில் மாநகரசபைத் தலைவராகக் கடமையாற்றும் திரு. காசிப்பிள்ளையவர்களால் விளக்கேற்றித் திறந்துவைக்கப்பட்டது. மற்றநான்கு தினங்களிலும் முறையே: பிரதிகாரர் திரு.வி.சின்னையா, மாவட்ட நீதிபதி திரு. எம். சிறீகந்தராசா, அதிவண. பிதா பி. எம். ஜோண், டக்றர் எஸ். சுப்பிரமணியம் என்பவர்களால் திறந்துவைக்கப்பட்டது. இச்சந்தர்ப்பங்களில் அதிவண. அதிபர் சுவாமியவர்கள், அவர்களைவரவேற்று அறிமுகப்படுத்திவைத்தார்.

வெள்ளிக்கிழமை சாயந்தரம் செவாலியர் எஸ். அருளானந்தம்அவர்கள் வண. பி. எம். ஜோண்சுவாமியவர்களின் படத்தைத்திரைநீக்கம் செய்துவைத்தார். விஞ்ஞானத்திற்கும், சம்பத்திரிசியார் கல்லூரிக்கும் அரிய பெருந்தொண்டுகளையாற்றிய ஒருவருக்கு இச்செய்கைதகுந்தது என்று கருதப்பட்டது. செவாலியர் அருளானந்தம்அவர்கள் தமது சிற்றுரையில் சென்றகால அதிபர்களையும், தலைமை உபாத்தியாயர்களையும் விசேஷமாக வண. ஜோண்சுவாமி அவர்களையும் பாராட்டிப்பேசினர்.

பொருட்காட்சியில் இடம்பெற்றிருந்த ரசிப்புக்குரிய நூதனமான உபகாரணங்களைப்பற்றி இந்த இடத்தில் விளக்குதல் சலிப்புக்கும், வன்மத்திற்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

## இந்த மங்கை யார்?

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

தன்னை வடிவாகச் சிங்காரித்து ஆயத்தப்படுத்தினுள். தனது அழகான சுருண்டகூந்தல் பொன்னைப்போல் பிரபைகொள்ளுமாறு அதனை வாரியிழுத்து மினுக்கினுள். எல்லாம்முடிந்ததும் நிலைக்கண்ணுடிமுன்சென்று தனது அழகுவடிவைப் பார்த்துவிட்டு "ஸ்திரியிடமிருந்து பிறந்த எந்தஆடவன்தான் என்னை இப்போது எதிர்த்துநிற்க முடியும்?" என்று பெருமிதமாகக்கூறிநின்ருள். இந்தக்கோலத்திலே அவள் கிறீஸ்துநாதரைக்காணப் புறப்பட்டுச் சென்ருள். ஆனல், அவள் கண்டது என்ன?

நயீம்பட்டணத்து விதவையின் ஏககுமாரன் மரித்துவிட, அவனை அடக்கஞ்செய்யுமாறு அப்பட்டணத்து வாயிலுக்குச் சமீபமாய் வெளியே வந்துகொண்டிருந்த பிரேதஊர்வலத்தைத் தான் தேடிவந்த கிறீஸ்துநாதர் நிறுத்தியதையும், அவ்விதவைமேல் மனமிரங்கி அவளை அழவேண்டாமென்றுஆற்றிக் கிட்டநெருங்கிப் பாடையைத்தொட்டு "வாலிபனே, உனக்குச் சொல்லுகிறேன், எழுந்திரு", என்று திருவாய்மலர்ந்து திரும்ப ஆருயிரும் ஆரோக்கியமும்கொடுத்து எல்லோருமே பிரமிக்கும்படியாகத் தாயிடம் அவனை ஒப்புவித்ததையும் மதலேனுள் தனது கண்ணுரக்கண்டதே ஆச்சரியமேலிட்டுத் திகைத்து மலைத்துப்போய் நின்ருள். அதன்மேல் அவரை விட்டுப்போக மனமற்றவளாய் அன்றுபகல் முழுவதும் ஏனைய சனக்குழாமுடன் அவரைப்பின் தொடர்ந்து சென்ருள். அவர் எல்லோர்மட்டிலும் — எல்லா வகையாலும் துன்புற்று வருந்துவோரான எவ்வெவர்மட்டிலும் எத்துணை பெரும்அன்பும், தயையும், அனுதாபமும், இரக்கசிந்தையும் உடையாரென்பதைக் கண்கூடாக் கண்டுகொண்டவளாய்ப் பலவாறு சிந்தித்திருக்கும்போது, அன்று திருமீட்பரும் தமது கடினஉழைப்பின் மத்தியில் கடைசியாய் மதலேனுள் பக்கமாகத்திரும்பி மிகுந்தகருணையுடன் ஓர்தரம் அவளை நோக்கினுர். அந்தக் கருணையான நோக்காலே அந்தக் கருணைவள்ளல் தமதுபக்கமாகஅவளை வெற்றிகொண்டார். அவரைத்தன்பக்கமாக வெற்றிகொள்ள எண்ணி ஆயத்தமாய்வந்த மதலேனுளை அவர் எவ்வாறு வெற்றிகொண்டார்.

"ஞானரோசாச்செடிகள் இயற்கை ரோசாச்செடிகளைப் போன்றன அன்று. இயற்கை ரோசாச்செடிகளிலே முட்கள்தங்கிவிடுகின்றன. ஆனல், ரோசாமலர்கள் போய்விடுகின்றன. ஞானரோசாச்செடிகளில் முட்கள் போய்விட, ரோசாமலர்கள் தங்கிவிடுகின்றன."

அர்ச். பிரான்சிஸ் சலேசியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியக் கட்டுரை

# நன்றி நினைவு

உயர்ந்தஎண்ணங்கள் ஒருவன்உள்ளத்தில் தோன்றுதலே அரியசெயலாகும். பள்ளத்தில் ஓடுந்தண்ணீரின் இயல்புபோல மனத்தில் தீயஎண்ணங்கள் அடிக்கடிதோன்றுவதும், உருக்கொள்வதும் இயல்பு. அந்தத்தீயநினைவுகளைமறுத்து, நல்லநினைவுகளிற்செல்ல மனத்தைத் திருப்புவதே அறிவின் செயல். இதனையே வள்ளுவப்பெருந்தகை,

"சென்றவிடத்தாற் செலவிடாதீது ஒரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு"

என்றுகூறினர். அந்தஅறிவு நன்றின்பால் மனத்தைச்செலுத்தி நல்லதை நினைக்கச்செய்தால் மனத்தில்எழுந்த நல்லெண்ணங்கள் சொல்லாக உருக்கொள்கின்றன. அன்புஎன்பது மனத்தின் நெகிழ்ச்சி. அந்தஅன்பு அறிவினால் மனத்தை உருகச்செய்யும் ஒரு செயலாகும். அந்தஅறிவின்செயலான அன்பு உருக்கொள்ளும்போது இன்சொல்லாய், ஈகையாய்மாறுகிறது. இப்படித்தான் பிறவும்என அறிதல்வேண்டும். எனவே, மனத்தில்உருவாகும் நல்லெண்ணங்கள் சொல்லாய், செயலாய் நிகழ்ந்து சமுதாயத்துக்குப்பயன்படும் நிலையை அடைகின்றன.

அந்த நல்லெண்ணங்கள் சொல்லாய் மாறும்நிலையில் மனிதனே பெரிதும் வெற்றிபெற்றவன். தன் உள்ளத்து எழும் நல்லெண்ணங்களை எண்ணியவாறே பிறரையும் நினைக்கவைக்கும் போராற்றலுடைய மொழியைப்பெற்றுவிட்டான் மனிதன். அதுவே, மனித உலகம்கண்ட முதல்வெற்றியும், விலங்கினம்முதலிய பிறஉயிரினும் சிறந்த பிறப்பு மனிதப்பிறப்பு என்பதற்குக் காரணமும்ஆகும்.

அவ்வாறு எண்ணத்தை வெளிப்படுத்தும் ஓசையாகிய சொல்லைப்பெற்றதோடு அமையாது மேலும்மேலும் முயற்சிசெய்து மொழியையும்கண்டு அதனைஎழுதிப் பலநூறு பலஆயிரம் ஆண்டுகள் வைத்து நினைத்தபடியே பின்வந்தவர்களும் சொல்லச்செய்தஆற்றல் மனிதனுக்கே பெரியவெற்றியும, வியப்புந்தரும் செயலாகும்.

அத்தனைபெருமிதச் செயலைக்கண்ட மனிதஉள்ளத்தில் எழுந்த உயர்ந்த நினைவுகள்பலப்பல. அவற்றுள் நன்றியைப்பற்றிய நினைவு ஒன்றினையே ஈண்டு எழுதநேர்ந்தது.

மனிதன் உயர்வடைவது அவனுடைய நினைவாற்றான். எவ்வளவு நல்லெண்ணங்களை, உயர்ந்தஎண்ணங்களைப் பெற்றுவிடுகிறானே அந்தஅளவுக்கு மனிதனும் உயர்ந்துவிடுகிறான். ஏன்? அவன்நினைவுதானே சொல்லாய், செயலாய் மாறுகின்றது. ஆகையால், உயர்ந்தநினைவு அழுத்தமடைந்து இன்சொல்லாய், நற்செயலாய்மாறுதலின், அவனது உயர்ந்தஎண்ணமே அவனை உயர்ந்தவனாக்கி விடுகின்றது. இதனையே வள்ளுவர்,

"வெள்ளத்தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்தனையது உயர்வு"

என்றுகூறினர். ஆகையால், நன்றி என்ற ஒருநினைவைப்பற்றி ஈண்டு திறம்படஅறிவதும் மனிதஉயர்வுக்குரிய சிறந்தநினைவும் செயலுமாகும்.

நன்றிஎன்பது பிறர்க்குநன்மைதரும் செயல்என்று பொருள்படும. நன்மை என்ற பண்புச்சொல், தொழிற்பெயராய், பண்பின்பயனைஊட்டும் செயலை உணர்த்தி நின்றது. எனவே. நன்மை தரும் செயல் நன்றிஎன்பதாயிற்று. நாம்செய்யும்செயல் பிறர்க்கு நன்மை தருமாயின் நன்மைபெற்ற பிறர்க்கு நாம்செய்தசெயல் நன்றியாகும். பிறர் செய்யும்செயல் நமக்கு நன்மைவிளைக்குமாயின் நமக்கு அச்செயல் நன்றியாகும்.

எனவே, மக்களாகியநாம் பிறர்செய்த எத்தனையோ நன்மைச்செயலைக்கொண்டுதான் வாழ்கிறோம் என்றநினைவை முன்னே எழுப்பிக்கொள்வது முதல்நன்றியாகும். நாம் பிறர்செய்த உதவிகொண்டு வாழ்கிறோம்என்றஉண்மையானநினைவு நமக்குவந்துவிடுமானால் நம்வாழ்வு பிறர்க்கு நன்மைசெய்வதற்காகத்தான் அமைந்திருக்கிறது என்றஉண்மையும் நமக்குவிளங்கிவிடும். "பிறர்குதவி செய், பிறர்க்குதவி செய்" என்று கூறுவதெல்லாம் ஏன்? பிறருதவியின்றி நீ வாழமுடியாதுஎன்ற உண்மையைக் காட்டத்தான் என்றறிதல்வேண்டும்.

திருவள்ளுவர் இல்லறப்பயனைஇறுதியாகச் சொல்லிமுடிக்கும்போது ஈகை, புகழ்என்ற இருதலைப்புக்களில் உதவியாகிய செயலும், அதன்பயனாகிய புகழும்கூறிமுடித்தார்.

ஆனால், ஒருவன் தன்வாணாள் முழுவதும் அரும்பாடுபட்டுப் பெரிதும் உழைத்துத்தேடியபொருளையும், பிறவற்றையும் கொடுத்தல் என்பது எப்படி? மனித இயல்புக்கு மாறுபட்டதன்றோ? தானும் தன்னைச் சார்ந்தவருமே நலனடைய அன்றோ ஒருவன் உழைக்கிறான்? அதனை எவ்வாறு பிறர் நலனடையக் கொடுப்பான்? அவன் கொடுக்க வேண்டுமானால் வாங்கிக்கொள்பவனுக்கும், தனக்கும்உள்ள தொடர்பு என்னஎன்றறியவேண்டாமா? அல்லது அவன்உழைப்பு "தனக்கன்று பிறர்க்கே" என்ற முடிவிலன்றோ உழைக்கவேண்டும். பிறர்க்கே உழைக்கும் மனிதர் உலகில் எத்தனைபேர் இருப்பர்? ஆகையால், மக்களினம் தாம்தேடிய, உழைத்துச்சம்பாதித்த பொருளை உதவவேண்டுமானால் தக்க காரணம்காட்டிக் கேட்கவேண்டும், அல்லது காரணங்காட்டிக் கொடு என்றுசொல்லவேண்டும்.

இந்தநிலையில் ஒருநினைவை எழுப்பிக்கொள்ளவேண்டும். நாம்பிறந்ததுமுதல் தாய், பால்முதலியனகொடுத்துப் பருவத்துக்கேற்ற உணவினால் மருந்துமுதலியதுணைக்கொண்டு நோயின்றிவளர்க்கிறாள். ஐந்துவயதுநிறைந்து பேச்சு முதலியனவளர்ந்ததும் தந்தை நம்மை அறிஞனாக்கவேண்டும்என்ற நல்லநினைவால் நமக்கு உணவும் உடையும்கொடுப்பதோடுஅமையாது கல்வியையும் கொடுத்துவளர்க்கிறார்.

பின்னால் ஆசிரியர் நம்முடையஇளைய பகுத்துணரும்நிலைமைக்கேற்பச் சிறிது சிறிதாக எழுத்தறிவித்து, சொல்லறிவித்து, பொருளறிவித்து, யாப்பறிவித்து, அணியியலும்அறிவித்து நம்மையே அறியும்படியான நன்னிலையில் நம்மைவளம்பட வளர்க்கிறான்.

பின்னர், நாம் ஒருநல்லாளோடுகூடி இல்லறமென்னும் நல்லறம்பூண்டு வாழ்வைத்தொடங்குகிறோம். இந்தநிலையிலும் நாம்உண்ணும் உணவும், உடையும் நாம்பெற்ற அறிவும், பெறும்அறிவும், நாம்வாழும் வாழ்க்கையும், இன்பமும், பிறவும் நாமேதேடிக்கொண்டனவா? அல்லது பிறர்அளித்தனவா? தாய், தந்தை, ஆசிரியர் நமக்குச்செய்ய என்னகடமைப்பட்டுள்ளனர்? நாம் அவர்கட்கு எப்படி உதவிசெய்வது? திருப்பிச் செய்துவிடமுடியுமா? ஆசிரியர்க்குஅறிவு புகட்டுவதுஎப்படி? அன்னைக்குப் பாலூட்டித் தாலாட்டிக் கைம்மாறு செய்வதெப்படி? தந்தைக்கு உணவுஉடையும் அறிவும் பெற உதவிசெய்து கைம்மாறுகாப்பதெப்படி? உலகில் இதுநடக்குமா? நடவாதஒன்றாயிற்றே. இங்ஙனமாக, அவர்களதுசெயலை அவர்களதுஉணர்ச்சியின்பயனுக்கு, உயர்ந்தஎண்ணத்துக்கு உலகந்தோன்றினதுமுதல் இன்றளவும், எந்நாட்டிலும், எந்தமொழியிலும், எந்தமதத்திலும், எந்தகாலத்திலும் ஒத்த இந்தப்பண்பாட்டுக்கு என்னகாரணம்? இந்தஒரே இயல்பினை நன்றாக நினைந்துநினைந்து பார்த்தால் சமுதாயம் பண்பாடுஅடைந்துவிடுமே. இதனையே திருவள்ளுவர் நன்றாகச்சிந்தித்து "மனிதனே! உன்னுடைய வாழ்வில் தோன்றும் அத்தனையும் மூச்சும், பேச்சுங்கூடப் பிறர்செய்த உதவியால்தான் நிகழ்கிறதுஎன்ற எண்ணம் எப்போதும்வேண்டும். பிறர்செய்த உதவிஇல்லையாயின் உனக்குவாழ்வேது? நீ வாழவேமுடியாது. நீயும் ஒருவர்க்கு நன்மைசெய்துவிடமுடியாது. ஆகையால், நீசெய்கிற உதவியைப் பெரிதாகப் பிறர் பேசட்டும். ஆனால், உனக்குப் பிறர்செய்தஉதவியை நீ மறவாதுபோற்றினால் அதுவே நாமும்பிறர்க்குதவிசெய்து வாழவேண்டும்என்ற நல்லநினைவை உண்டாக்கிவிடும். பிறரால் வாழ்ந்தவன், வாழ்கிறவன் பிறர்க்குதவிவாழக் கடமைப்பட்டிருக்கிறான்என்ற உண்மையான நிலையை உண்டாக்கும்" என்று உபதேசிக்கிறார்.

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று."

A. N.

—(⌣)—

விஞ்ஞானம்

# உருளும் உலகில்

### மைசூர்

உமி, வாழைமடல், கரும்புச்சக்கை இவைபோன்ற கழிவுப்பொருள்களிலிருந்து 'கார்க்'போன்ற வெப்பத்தடைப்பொருள் ஒன்றைத்தயாரிப்பதற்கு மைசூர், மத்தியஉணவுத் தொழில்நுட்ப ஆராய்ச்சிநிலையம் ஒருபுதிய முறையை உருவாக்கியிருக்கிறது.

### சென்னை

இந்திய விஞ்ஞானக்காங்கிரசின் நாற்பத்தைந்தாவது மகாநாடு தைமாதம் 6-ந்திகதிமுதல், 12-ந்திகதிவரை சென்னையில் உன்னதமாக நடைபெற்றது. விஞ்ஞானச்சக்திகளை அழிவின்பாதையிற் செலவிடாது, ஆக்கவேலைகளில் ஈடுபடுத்தவேண்டுமென்று மாநாட்டிற் கலந்துகொண்டவிஞ்ஞானிகள் ஏகமனதானகருத்தைத் தெரிவித்தனர்.

### புதுடில்லி

புதுடில்லி, தேசியபௌதிக ஆராய்ச்சிச்சாலையில் பனஞ்சாறுகாய்ச்சுவதற்குச் சூரிய சக்தியை உபயோகிக்கும் சாதனம்ஒன்றை உருவாக்கியுள்ளனர். இச்சாதனம் தனுவிலுள்ள பனைவெல்லத்தொழில்நுட்ப ஆராய்ச்சிநிலையத்தில் பரிசோதித்துப் பார்த்தபோது, திருப்திகரமான பலன்கிடைத்துள்ளது. பரிசோதனையின்போது சாதாரணகிராமங்களில் உபயோகிக்கப்படும் சாறுகாய்ச்சும்ஏனங்களே உபயோகிக்கப்பட்டன.

### லெனின்கிருட்

லெனின்கிருட் றேடியோஆராய்ச்சிக்கழகத்தினர் ஒருசின்னஞ்சிறிய றேடியோவைப் புத்தகஉருவில் ஆக்கியுள்ளனர். இப்பேசும் புத்தகத்தைத் திறந்தால் படிக்கமுடியாது. கேட்கலாம். இந்தறேடியோவுக்கு ஏரியல் கிடையாது.

### சிகாக்கோ

கீழேவிழுந்தாலும் உடையாத பிளாஸ்ரிக் மூக்குக்கண்ணாடிகளைச் சிகாக்கோவில செய்திருக்கிறார்கள். இவை இப்போதைய மூக்குக்கண்ணாடியைவிடப் பலமுறையில் நன்மைதருகின்றனவாம்.

### மங்கோலியா

மார்கழி 4-ந்திகதியன்று மங்கோலியாவில் உலகிலேயே மிகப்பெரியதான நிலநடுக்கம் ஒன்றுஏற்பட்டது. அதனால், ஆல்டி மலைச்சிகரங்களில்ஏற்பட்ட வெடிப்புகளால் கோபிபாலைவனஓரத்தில் எட்டுமைல்நீளம்வரை புதியநதிகள்சில தோன்றியுள்ளன.

### ருஷியா

பனிநிலங்களில் விதைவிதைக்கும் விசித்திரமான விதைக்கருவியொன்று சோவியற்யூனியனில் உருவாக்கப்பட்டுள்ளது. இது குளிர்காலத்துக்கெனப் பிரத்தியேகமாகத் தயார்செய்யப்பட்டது. இதில் ஒருதுடைப்பமும், பனிதுடைக்கும்சாதனமும், பனிப்பூமியை ஆழஉழத்தக்க கலப்பைகளும் பொருத்தப்பட்டிருக்கின்றன.

### அமெரிக்கா

அமெரிக்காவில் மௌண்ட்வில்சன் பலோமோர்லிக் ஆதியஇடங்களில் இ பதுஆண்டுகள்தொடர்ந்து பரிசோதனைச்சாலைகள் நடாத்திவரும் பரிசோதனைகளிலிருந்து பிரபஞ்சம் சகலதிசைகளிலும் விரிந்துஅகன்று பெரிதாகிக்கொண்டுவருவதாக அங்குள்ள வானசாஸ்திரநிபுணர்கள் அறிவிக்கின்றனர்.

* * *

அமெரிக்கா நடமாடும் தெலிபோன் ஒன்றைக் கண்டுபிடித்துள்ளது. விரைந்துசெல்லும் ஊர்திகளிடையே இருப்பவர்கள் ஒருவருக்கொருவர் இதன் மூலம் பேசிக்கொள்ளலாம்.

—(⌣)—

# அடைக்கலநாயகி ஆலயமும் முதற் பூசையும்

தவழ்மதி 5-ந் தேதி பொழுது புலர்ந்தது. ஆலயமணிகள் ஆர்ப்பரித்தன. புதிதாய் அபிஷேகம் செய்யப்பெற்ற வண. பெனெற் கொன்ஸ்ரன்ரைன் குரவரவர்கள் பலகுருமார் சமேதராய் மேற்றிராசன மாளிகையில் இருந்து மோட்டாரதாரூடராய் எழுந்தருளி ஆலயமுன்றிலை அடைந்தார். அங்கே ஆவலுடன் எதிர்பார்த்திருந்த பங்குக் கிறீஸ்தவர்கள், இனசனர்கள் தங்கள் வண. கட்டளைச்சுவாமியாரின் தலைமையின்கீழ் நவகுருவை ஆரவாரச்சிறப்புகளுடன் வரவேற்று, சித்திரவிசித்திரச் செடிகொடிகளால் அலங்கரிக்கப்பெற்று, மின்சாரவிளக்குகள் ஜொலிக்கத் தேசோமயமாய்விளங்கிய சிங்கார பீடத்துக்கு அழைத்துச்சென்றனர்.

புதியகுரவர் தமது முதற்பூசைப்பலியை முக்குரவர் உதவிபுரிய, பாடகர் குழாம் இசைக்க, பக்திப்பரவசமுடன் நிறைவேற்றிநின்றார். பூசையின்போது வண. எம். ஜே. மரியாம்பிள்ளை சுவாமியவர்கள் குருத்துவத்தின் மகத்துவத்தையும், அதன் பாரதூரமான கடமைகளையும் ஒவ்வொன்றாக எடுத்துரைத்து மக்களின் கல்மனங்களையும் கலக்கி உருக்கத்தக்க காத்திரமான பிரசங்கம் ஒன்று பொழிந்துநின்றார். கிறீஸ்தவர்களில்அநேகர் தெய்வீக விருந்தருந்தி புதியகுரவருக்கு வேண்டிய அருட்பிரசாதங்களைத் தேவன் அருளுமாறு மன்றாடிநின்றனர்.

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புனிதவீரர் பக்கம்



அருமைச் சகோதரங்களே!

காலை, மாலை வணக்கம் வாழ்க்கையில் நிலைதளம்பாது நிற்க மிக உபயோகமாகின்றது. ஆகவே, அவைகளைப் பிரமாணிக்கமாய் அனுசரிப்பது உங்கள் யோக்கியத்தின் கடமையாகும்.

மாலையில் வீடுவந்துசேரத் தாமதமாகுமெனக் கண்டால் ஏற்கனவே வீட்டாருக்கு அறிவித்துவிடுவது அவசியம். இத்தகைய மதிப்பு, வளரும் இளைஞரிடம் எதிர்பார்க்கப்படுகிறது. வளருகிறவர்கள் எனக் காட்டுங்கள்; வீட்டுக் கிரமங்களை மாற்றுவது அவசியமாகில் அதிகுறைவாக மாற்றுவது உசிதம். சிநேகிதரை விருந்துக்கு அழைப்பதாயிருந்தால் அச்சுமையை இலகுவாக்க முயலுங்கள்.

அரசமுறையில் சாப்பிட்டபின் பாத்திரங்களைக் கழுவி வைப்பது இளைஞருக்கு இழுக்கல்ல. பிந்திவருவதால் பிறருடைய பசி தீராது போகவேண்டுமென்பதை உணர்ந்து உங்கள் உணவைப் பகிர்ந்து வைக்கும்படி கூறி, உங்கள் தேவையை நீங்கள் கவனித்துக்கொள்ள முடியும் எனக் கூறிவிடுங்கள்.

இத்தகைய ஒழுக்கம் பிறர் கடமையை இலகுவாக்கவும், பிறர் உங்களில் அன்புகொள்ளவும் உதவும்.

அண்ணு.

சொல்லுகிறது. அதுதான் என் கவலைக்குக் காரணம்."

தகப்பனுர் மகளை முதுகில் மெதுவாகத் தட்டிக்கொடுத்து "வெகுமதிகள், பரிசுகள்பெற ஆசிப்பது பிழையில்லை; திறமான கலாசாலைக்குப் போக விரும்புவதும் குற்றமில்லை. ஆனுல், அவைகளை மிதமிஞ்சிஆசிப்பதுதான்குற்றம். அதைப்பற்றித் தான் சாக்கிரதையாயிருக்க வேண்டும்.

பணம் பண்டத்திலே அளவு மிகுந்தஆசை உள்ளவர்கள் இறைநாடுசேர்வது,—மோட்சமுத்தியடைவது சிரமம்என்ருர் கிறீஸ்துபெருமான். செல்வத்தை, மகிமைபெருமையை அதிகம் விரும்பித் தேடாதவர்களை, — மனதிலும் எண்ணத்திலும் ஆசையிலும், வறியவர்களாயிருப்பவர்களை அவர் பாராட்டினுர்.

"துரைமணி! நீர் அந்தச்சோதனைக் கேள்விப்பத்திரத்தை என்ன செய்யப்போகிறீர் என்று நான் உம்மைக் கேட்கவில்லை. நீர் என்ன செய்வீர் என்று எனக்குத்தெரியும்" என்று கூறிமுடித்தார் துரைமணியின் தகப்பன்.

துரைமணி, தலையில்நின்று ஏதோ பாரம்நீங்கியவள்போல் உணர்ச்சி பெற்ருள். தகப்பனைப்பார்த்து: "மனத்தரித்திரர் பாக்கியவாளர் அப்பா; ஏனெனில், நான் மிகமிகச் சந்தோஷம் அனுபவிக்கிறேன்"என்று புன்முறுவல் பூத்தாள்.

*ஆதலால், யேசுநாதர் சுற்றிலும்பார்த்து: "பணக்காரர் சர்வேசுரனுடைய இராச்சியத்தில் பிரவேசிப்பது எவ்வளவோ அருமையாயிருக்கிறதென்று தம்முடைய சீஷர்களுக்குத் திருவுளம்பற்றினுர்" (மாற்கு, 10 : 23).*

*"ஆஸ்திக்காரன் சர்வேசுரனுடைய இராச்சியத்தில் பிரவேசிப்பதைவிட, ஒட்டகமானது ஊசியின்காதுக்குள் நுழைந்துபோகிறது அதிகஎளிதாம் என்ருர்" (மாற்கு, 10 : 25).*

—✻—

## ஒழுக்கமே உயிர்

— M. K. R. —

அன்புப்புனிதவீரரே,

வருங்காலச்செல்வங்கள் அல்லவா நீங்கள்? ஆம்; அதிலென்னசந்தேகம். உங்களிலே யார்யார் என்னென்ன நிலையில் வாழப்போகிறீர்களோ, எப்படி எப்படி இருக்கப் போகிறீர்களோ என்று இப்போது அதை எப்படி அறுதியிட்டுக் கூற முடியும்? இருந்தாலும் ஒன்று மட்டும் உறுதி.

உங்களிலே சிலர் பாடசாலைஆசிரியர்களாகமாறலாம்; சிலர் பேராசிரியர்களாகக்கூட ஆகலாம்; சிலரோ இசைமன்னர்களாகத் திகழலாம்; ஓவியக்கலைஞர்களாக, சிறந்த சிற்பிகளாக, கற்பனைமிகு எழுத்தாளர்களாகவும் விளங்கலாம்; வேறு சிலரோ நீதிமன்றத்திலே வழக்காடும் வாழக்கறிஞர்களாக வாழலாம். நீதிகூறும் நீதிபதிகளாகக்கூட உங்களிலேசிலர் வரலாம். என்ருலும் நாட்டில் அவரவர்களுடைய படிப்பு—பட்டம், தகுதி, திறமைஇவைகளைக்கொண்டுதான் அவரவர்களுக்குப் பதவிகளும் கிடைக்கின்றன.

பட்டம்பெறுவதையோ, பதவிக்கு வருவதையோமட்டுமல்ல,நாடுவிரும்புவது நல்லவனுக, நாணயஸ்தனுக, நாட்டுமக்களின் நன்மதிப்பைப் பெற்றவனுக நீங்கள் ஒவ்வொருவரும் வாழவேண்டுமென்பதையே. இந்தநற்குணங்கள் உங்களில் உண்டாக ஒவ்வொருவரும் ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்கவேண்டும். ஒழுக்கமே உங்களை நல்லவனுக்கும். ஒழுக்கமேஉங்களை உன்னதஸ்தானத்தில் ஏற்றிவைக்கும். அதுமட்டுமல்ல, ஒழுக்கமே உயிர் என்று நீங்கள் கொள்ளவேண்டும். திருவள்ளுவர் கூட உயிரைவிட ஒழுக்கம்தான் சிறந்ததுஎனக் கூறுகிருர்.

ஒழுக்கம் விழுப்பந் தரலான்
ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்

—குறள்

—✻—

## கேட்டீர்களா?

**நோவில்லாமல் ஊசி ஏற்றுதல் :**

ஊசிஏற்றி மருந்தைப்புகுத்தும் சமயம் பிணியாளர்களுக்கு அதிக வலி உண்டாகிறது. அநேக பிணியாளர்கள் பயத்தினுலும், வலி தாங்க முடியாததினுலும் மூர்ச்சையடைந்து விடுகின்றனர். ஆனுல், இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்ட ஒருகருவியின்மூலம் வலியில்லாமலே மருந்தை உட்புகுத்தலாம். தோலைப்புட்காமல் மயிரிழைத் துவாரத்தின்மூலம் ஒருதுப்பாக்கிபோல் மருந்தை உட்செலுத்திவிடுகிறது. இந்தக்கருவி இன்னும்பொதுப்பிரயோகத்துக்கு வரவில்லை.

**தண்ணீரை ஈரமாக்குதல் :**

தண்ணீர்தான் ஈரமாச்சே, அதை எப்படி இன்னும்அதிகமாய் ஈரமாக்கமுடியும்என்று நாம்நினைக்கலாம். ஆனுல், விஞ்ஞானத்தின் அதிசயங்களுக்கு அளவுகிடையாது. நெருப்பை அணைப்பதற்காக இந்த ஈரத் தண்ணீர் கண்டுபிடிக்கப்பட்டது. தண்ணீருடன் சில இரசாயனப்பொருட்களைச்சேர்த்தால் அதன் ஈரம் அதிகரிக்கப்பட்டு, எந்தமேல்பரப்பின்மேலும் வெகுசீக்கிரமாய்ப் பரவக்கூடும். ஆகவே, இது தண்ணீரைவிடச் சீக்கிரமாய் நெருப்பை அணைத்துப் புதுநெருப்பைத் துவக்காதபடி செய்கிறது.

**2000 பல்லுள்ள மிருகம் :**

அமெரிக்காவிலுள்ள நியூஜெர்ஸி எனுமிடத்தில் புராதன மிருகத்தின் எலும்புக்கூடுஒன்று சமீபத்தில் கண்டெடுக்கப்பட்டது. அலகுமிருகம் என்னும் இப்பிராணி 15 அடி உயரமும், 30 அடி நீளமுமுள்ளதாயிருக்கும்என்று கவனித்திருக்கிருர்கள். இதற்கு 2000 பற்கள் இருந்தனவாம்.

—✻—

**சுவிசேஷ விளக்கம் — 1.**

## பாக்கியவாளர்

"இதென்ன! வேப்பெண்ணெய் சாப்பிட்டவள்போலிருக்கிறதே முகம்", என்ருன் மோகன் தனது சகோதரி துரைமணியைப் பார்த்து. துரைமணியின் மனதை ஏதோ அரித்துக்கொண்டிருந்தது. அவளால் தாங்கமுடியவில்லை. தன் அறைக்குள்ளிருந்த கட்டிலில் போயிருந்தாள் மறையலாமென்று. அவளுடைய தகப்பனுர் அங்குபோனுர். "இப்படி முன்ஒருபோதும் எனக்குச் சம்பவித்ததேயில்லை. அப்பா! என்ன செய்வதென்று தெரியவில்லை", என்று துரைமணி சொன்னுள். "என்ன நடக்கவில்லை"? எனக்கேட்டார் தகப்பன் அமிர்தநாதர். "நான் பரீட்சையில் கள்ளஞ்செய்ய விரும்பவில்லை." தகப்பனுர் அவளருகே உட்கார்ந்தார். "ஏன்மகளே! நடந்ததை விபரமாய்ச் சொல்லேன்."

"அப்பா, ஒவ்வொருஆண்டும் எமது கலாசாலையில் வித்தியாவெகுமதி கொடுப்பதை அறிவீர்கள். அந்த வெகுமதியைப்பெற எனக்கு மனம் நிறைந்தஆசை. அதினுல் வெகு பெருமையுங்கூட. அது எனக்குக் கிடைத்தால் அறிந்தவர்கள் எல்லாரும்என்னை மெச்சிப்புகழுவார்கள் என்று நினைக்கும்பொழுது என் மனம் புளகாங்கிதமடைகிறது. அப்படி ஆசைப்படுவதுகூடாதா அப்பா?" என்ருள் துரைமணி.

தகப்பனுர் தமது உதட்டளவில் சிரித்துவிட்டு "பிழையில்லை" என்ருர்; "வேறு."

"அடுத்த காரணந்தான் இன்னும் பொல்லாதது"என்ருள் துரைமணி. பின் "வித்தியாவெகுமதி கிடைத்து மத்திய கல்லூரிக்குச் சென்ருல் என்னையும் ஒருபெரியவீட்டுப் பணக்காரப் பிள்ளைஎன்று நினைப்பார்களல்லவா?

அடுத்தகிழமை நடக்கவிருக்கும் வித்தியாவெகுமதிப் பரீட்சைக்கேள்விகள் இன்று என்கையிலகப்பட்டன. இனி வெகுமதி எனக்குத்தான் அப்பா. ஆனுல், கள்ளஞ்செய்வது சரியல்லவென்று என்மனம்

## பெரியார் வாழ்விலே

ஜோர்ஜ் வாஷிங்ரன் என்பவர் 1732–ம் ஆண்டு வேர்ஜினியாவில் பிறந்தார். இவர் சிறுவயதிலிருந்தே உண்மையைக் கடைப்பிடித்துவந்தார். இதற்கு உதாரணமாக: ஒரு நாள் இவர் தம்வீட்டுத் தோட்டத்திலுள்ள ஓர்அருமையான பழச்செடியை வெட்டிவிட்டார். அதைக் கண்டு அவர்தந்தை, "இச்செடியை வெட்டியது யார்?" என்று கோபத்துடன் கேட்டார். அதற்கு வாஷிங்ரன், "நான்தான் வெட்டினேன்" என்று தயங்காமல் கூறினுர். இளமையில் தந்தையை இழந்த வாஷிங்ரன் துன்பச்சூழ்நிலையில் வளர்ந்தார், வாழ்ந்தார்.

இவர் இராணுவத்திலுள்ள ஒரு கிழப்போர்வீரனை அணுகிப்போர்ப் பயிற்சிமுறையைக் கற்றுணர்ந்தார். தம்முடைய நாற்பது வயதுவரை பொதுவாழ்வில் ஈடுபடாத இவர் சண்டைக்காலத்தில் ஒருசேனையை நன்றுபழக்கி, அதற்குத் தானே தலைமையும்பூண்டார். நேர்மையும், வீரமும், தகுதியும்ஒருங்கே அமையப்பெற்ற இவரதுசேனைகள் இவர் கூறியபடியே நடந்தன. இப்படிப்பட்ட தகுதிவாய்ந்தசேனைகள் தாம் போரிற்புகவே, அமெரிக்கா வெற்றியடைந்தது. 1783-ம்ஆண்டு இங்கிலாந்து அமெரிக்காவுடன் சமாதானம்செய்து கொண்டது. அதன் சுதந்திரத்தையும் ஒப்புக்கொண்டது. ஐக்கியநாடுகளின் முதல்தலைவராக ஜோர்ஜ் வாஷிங்ரன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அந்நியஅரசுகள் அதிசயப்படும்படி அரசியல்அலுவல்களில் எட்டு வருடகாலம் தலைவராக இருந்து பணிபுரிந்தஇவர் மூன்ரும்முறையும் தலைவராக இருக்கவிரும்பாமல்விலகி ஓய்வெடுத்துக்கொண்டார். ஜோர்ஜ் வாஷிங்ரன் 1799-ம்ஆண்டு அமெரிக்கநாட்டின் "தேசபிதா". வாஷிங்ரன் தொண்டு யாவரும்முன்னேற ஒரு கொழுகொம்பாம். E. N.

---

" சாவானபாவத்துடன் இருக்கிறவர்களுக்காக மன்ருடிக்கொள்வது மகாஉச்சிதமான தருமமாகும்."

அவிலாவின் அர்ச். தெரேசம்மாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று....... பார்வையிட்டல்?

இத்தாலிதேசத்தில் அல்ப்ஸ்மலையில் ஓர்ஏரி. அந்தஏரிக்கரையில் ஒரு நந்தவனம். மலைவளம் பார்க்கச் செல்லும் உல்லாசப்பிரயாணிகள் இந்தநந்தவனத்தைப் பார்வையிடத் தவறுவதில்லை.

ஒருபிரயாணி இந்தநந்தவனத்தின் அழகையும், சுத்தத்தையும்கண்டு பிரமித்துப்போனான். அந்த நந்தவனத்தில் போடப்பட்டிருந்த ஆசனங்களில் அணுவளவு தூசிகூடக் காணப்படவில்லை. காய்ந்த இலையோ, வாடிப்போன பூவோ அங்கு காணப்படவில்லை. நந்தவனத்தினூடே செல்லும்பாதைகள் பெருக்கிச் சுத்தமாக வைக்கப்பட்டிருந்தன. குப்பை கூளங்கள் எங்கேயாவது காணப்படுமாஎன்று நந்தவனம்முழுவதும் சுற்றிப்பார்த்தான் பிரயாணி. எந்தஇடத்திலும் எந்தவிதமான சுத்தக்குறைவும் காணப்படவில்லை. பிரயாணி தோட்டக்காரனோடுபேச விரும்பினான்.

"இந்தத் தோட்டத்தில் எத்தனை வருடகாலமாய் வேலைபார்க்கிறீர்?" என்றான் பிரயாணி.

"கடந்த 25 வருடகாலமாக" என்றான் தோட்டக்காரன்.

"இந்தத் தோட்டத்தின் சொந்தக்காரர் எங்கேஇருக்கிறார்?"

"இங்கிருந்து 200 மைல் தூரத்தில் இருக்கிறார்."

"அவர் அடிக்கடி இங்குவருவதுண்டா?"

"இல்லை, அவர் கடைசியாக இங்குவந்து 12 வருடங்களாகின்றன."

"அப்படியானால் இந்தத் தோட்டத்தை மேற்பார்ப்பதுயார்?"

"கணக்குப்பிள்ளை ஒருவர் இருக்கிறார்."

"அவர் அடிக்கடி இங்கு வருவதுண்டோ?"

"அவரும் அடிக்கடி வருவதில்லை. சொந்தக்காரரும், கணக்குப்பிள்ளையும் எப்போதாவது 5வருடத்திற்கு ஒருமுறையோ, அல்லது 10 வருடத்திற்கு ஒருமுறையோதான் வருவார்கள்."

"நீர் சொல்லுவது ஆச்சரியமாயிருக்கிறதே! நாளைக்குச் சொந்தக்காரர் வரப்போகிறதாயிருந்தால் ஒருவன்தோட்டத்தை எவ்வளவு சுத்தமாய்வைத்திருப்பானோ அவ்வளவு சுத்தமாய் வைத்திருக்கிறீரே!"

"நாளைக்கா? இன்று தோட்டக்காரர்வந்துவிடுவார் என்றுஎண்ணிக்கொண்டு தினந்தோறும் என்வேலையைச்செய்கிறேன்" என்றான்தோட்டக்காரன்.

**இன்று யேசுக்கிறீஸ்துநாதர் உன் தோட்டத்தைப் பார்வையிட்டால்?**

## யோசேப் எந்தவயதில் மரித்தார்

1. யோசேப்பின் சகோதரர் அவரை வர்த்தகரிடத்தில்விற்ற வெள்ளிக்காசுகளின் தொகையைஎடுத்து,

2. இத்தொகையைப் பார்வோன் தன்கனவுகளில் கண்டபசுக்களின் தொகையினால் பெருக்கு,

3. பெருக்கிவந்த தொகையை அக்காலத்தில் பஞ்சம்நீடித்திருந்த வருடங்களின் தொகையினால் பிரி,

4. பிரித்துவந்ததொகையை யோசேப்பின் சகோதரரின்தொகையால் பெருக்கு,

5. பெருக்கிவந்த தொகையுடன் யோசேப் பார்வோனுக்குமுன்பாக (உயர்ந்தபதவி அடைந்தவுடன்)நிற்கும்போது அவருக்குஇருந்த வயதைக்கூட்டு,

6. கூட்டிவந்ததொகையை யோசேப்பின்குமாரரின் தொகையினால் பிரி,

7. யோசேப் தன்தகப்பனுக்கு வெகுமதிகள் வைத்து அனுப்பின கழுதைகளின்தொகையைப் பிரித்துவந்த தொகையினின்று கழி,

8. கழித்துவந்த தொகையுடன் பெஞ்சமினுக்கு யோசேப்கொடுத்த மாற்றுவஸ்திரங்களின் தொகையைக் கூட்டு,

9. கூட்டிவரும் தொகையே மரிக்கும்போது யோசேப்புக்கு இருந்த வயது.

### மந்திரக் கணக்கு

உங்கள் சிநேகிதரிடம் இந்தக்கணக்கைக்கேட்டு அவர்கள் அதிசயப்படக்கூடியதாய் நீங்களே மறுமொழிகூறலாம்.

| | |
|---|---|
| நீ ஒருதானத்தை நினை | (சரி...... 2) |
| அதை ஐந்தால் பெருக்கு | (10) |
| அத்துடன் இரண்டைக் கூட்டு | (12) |
| அதை நான்கால் பெருக்கு | (48) |
| அத்துடன் பன்னிரண்டைக் கூட்டு | (60) |
| அதை ஐந்தால்பெருக்கு | (300) |

கடைசியாய்வந்த மறுமொழியை அவர்உனக்குச் சொல்லட்டும். அதை நீ நூறால்பிரித்துவரும் எண்ணிலிருந்து ஒன்றைக்கழி. கழித்தபின் மீந்திருக்கும்எண்ணே அவர் முதலில்நினைத்த எண்.


## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 1022

**யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில்**

யாழ்ப்பாணம் நல்லூர் இராமலிங்கம் ஸ்கம்பெண் தங்கரெட்டினம் —வழக்காளி.

எதிராக

யாழ்ப்பாணம் நல்லூர் நாயன்மார்கட்டு பெருமாள்பிள்ளை இராசகுலசூரியர் —எதிராளி.

யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டின் M. B 1022-ம்இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால்விபரிக்கப்படும் ஓர்துண்டுக்காணி 1958-ம்ஆண்டு பங்குனிமாதம் 20-ந்திகதி வியாழக்கிழமை முற்பகல் 10மணிதொடக்கம் அந்தக்காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1,170-உம், இன்னும் ரூபா 1000-த்திற்கு 8-6-56 தொடக்கம், 30-8-56வரையும் 100-க்குப் 12%வட்டியும், பின்பு கூட்டுத்தொகைக்கு இறுபடும்வரைக்கும் 100-க்கு 5%வட்டியும், கோட்டுச்செலவு 190ரூபா 63சதமும். கொடுபட்டரூபா 650/-

### காணியின் விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய் கோயிற்பற்று, கோப்பாய் தெற்கிறை "காட்டுவாசல்." நி. ப. 10. ஆனால், ஆட்சிப்படியும், அளவின்படியும் நி. ப. $19\frac{1}{2}$. இதில் வடக்குப்பக்கமாக அறுதிவிற்றது போக மிகுதி நி. ப. $9\frac{1}{2}$-யும், பயிர்வகைகளும், கிணறும். எல்லை: கிழக்கு— சிதம்பரப்பிள்ளை கைம்பெண் வாலாம்பிகையின் ஆதனம். வடக்கு— மிகுதி ஆதனம். மேற்கு— கையொழுங்கை முகப்பும், எதிரியின் ஆதனமும். தெற்கு — எதிரியின் ஆதனம் இதடங்கலும். ஆனால், கிழக்கெல்லைக் காணிக்காரியின் தெற்கெல்லை ஓரமாகப்போகும் 4 அடி அகலமுள்ள கைஒழுங்கையால் போக்குவரவுசெய்யும் உரித்தும், இன்னும் வாலாம்பிகையின் $2\frac{1}{6}$ குளி விஸ்தாரமுள்ள கைஒழுங்கையால் தெற்கே இருக்கும் ரோட்டுக்குப் போக்குவரவு செய்யும் உரித்துப் பிறநீங்கல்.

பதிவு இலக்கம் $K. \frac{184}{255}$.

**செ. இரத்தினசபாபதி,**
24, சப்பெல்வீதி, கொம்மிஷனர்.
யாழ்ப்பாணம். 17-1-58



# EDUCATIONAL

Pitman-qualified Stenographer will take in girl-students for tuition in Shorthand and Type-writing. If desired, they will be prepared for the Pitman's Shorthand Typist Certificate, the London Chamber of Commerce, Complete or Part Higher Certificate for Short-hand Typists, G. C. E. Ord. Level, Adv. Level and other examinations.

Apply in person to:—

**(Miss) M. M. Thuraisingham,**
20, Third Cross Street,
Jaffna.


## விஞ்ஞான-கைப்பணி ............

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கும் இடமாகும். தாவர, மிருக, பௌதிக, ரசாயனசாஸ்திரப்பகுதிகள் பெரும்பாராட்டுகளைப் பெற்றன. விசேஷமாக மாணவர்கள் இப்பகுதிகளில் மணித்தியாலக்கணக்கில்நின்று தங்கள் அறிவுகளைப் பெருக்குவதிலீடுபட்டிருந்தார்கள். திறமையாற்றல்பெற்றவர்களிலும்பார்க்க நன்றாக இப்பகுதிகள் எங்களுடைய மாணவர்களினால் கணிக்கப்பெற்றிருந்ததே இதற்குக் காரணம்.

பொழுதுபோக்கு வினோதங்களைப் பற்றிக் கூறாமல்விடின் இந்தஅறிக்கை அபூரணமாகக் கொள்ளப்படும். சினிமாக்காட்சிச்சாலையும் சாதுரியமுள்ள விளையாட்டுகளும் இப்பகுதியில் இடம்பெற்றன. சினிமாக்காட்சிகளைக் காட்டுவதற்குப் படங்களைத்தந்துதவிய அமெரிக்க, ஆங்கிலேயதூது நிலையங்களுக்கும், மற்றும் விவசாயப்பகுதிக்கும் எங்கள் நன்றியைத்தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். இவ்வரியவொரு சாதனையை நிலைநாட்டிய இக்கல்லூரியைப் பாராட்டாமல் இருப்பது கஷ்டமாகும். இதை நிலைநாட்ட சுவாமிமார்களும், உபாத்திமார்களும், மாணவர்களும், மற்றும் இங்கு தொண்டாற்ற பெரும்மனப்பான்மையுடன் வந்தருளிய பெரியார்களும், மற்றும் வேலையாட்களும் பெருந்தன்மையாக உதவியுள்ளார்கள்.

இப்பொருட்காட்சியானது சம்பத்திரிசியார் கல்லூரியின் மகிமைக்கும், பெருமைக்கும், நூற்றாண்டுகளாக அழியாத ஒருசாதனையாக இருக்குமென்பதில் ஐயமில்லை.


## நூல்

கைத்தறி நெசவுக்குத் தேவையான நூல்களும், உபகரணங்களும், மீன்பிடி வலைக்குத் தேவையான நூல்களும் கீழ்க்கண்ட இடத்திற் சகாயமாகக் கிடைக்கும்.

**குமார் ஏஜன்சி**
130, செட்டித்தெரு,
கொழும்பு.


## ஞான ஒடுக்கம்

கொழும்பு, கிரான்ட்பாஸ் அர்ச். சூசையப்பர் தேவாலயத்தில் வழமைபோல இவ்வருடமும் மாசிமாதம் 16-ந் திகதி ஞாயிற்றுக்கிழமைமுதல் 22-ந் திகதி சனிக்கிழமைவரை பெண்களுக்கும், 23-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் பங்குனிமாதம் 2-ந் திகதிவரை ஆண்களுக்கும் தமிழில் ஞானஒடுக்கம் போதிக்கப்படும். மதுரை, அதிமேற்றிராசனத்தைச்சேர்ந்த வண. ரி. எஸ். தைரியநாதர் சுவாமியவர்கள் ஞான ஒடுக்க போதகஞ் செய்வார்.

**நன்றாய்ச் செலவிட்ட நாள் முடிவில் இளைப்பாறுவது இன்பம்; அதுபோல் நன்கு செலவழித்த சீவியத்தின்பின் மரணிப்பது இன்பந்தரும்.**

— லெயோனட் டா வின்சி

## அடைக்கலமாதா ......

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் நவகுருவரைப் பங்குக்கிறீஸ்தவர்கள், கன்னியாஸ்திரிமார், பலகுருமார்புடைசூழப் பாடசாலை மண்டபத்துக்கு அழைத்துச்சென்று, உயராசனத்திருத்தி, மாலைகள் அணிந்து, வரவேற்பு உபசாரப் பத்திரமொன்று வாசித்து உபகரித்தனர். அத்தருணம் வண. கட்டளைச்சுவாமியார் எழுந்து, புதியகுருவரின் தேவபக்தியையும், பரம்பரையாய்ப் பலகுருமாரை உதிக்கச்செய்த அவரது குடும்பச் சிறப்பையும் விதந்துபேசி, அவ்வித குடும்பத்தைப் போன்று ஒவ்வோர்குடும்பமும் தங்கள் புத்திரபாக்கியங்களில ஒன்றைத் தேவனுக்குத் தொண்டுசெய்ய நல்மனமாய்க் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுச் சுருக்கமாகவும், மனதுக்கு இன்பந்தரும்முறையிலும் சொற்பொழிவொன்று ஆற்றினின்றார்.

அப்பால் புதியகுரவர் எழுந்து தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றிகூறித் தேவன் தமது தோளிற் சுமத்திய சிலுவையைத் தாம் கடைசிமட்டும் மன உற்சாகத்துடனும், ஆத்தும இரட்சணிய வேகத்துடனும் சுமந்துசெல்லுமாறு தமக்காக மன்றாடும்படி கேட்டுநின்றார்.

— A. S.

## லூர்துமாதா நூற்றாண்டு விழா

நீர்கொழும்பு, பெரியதெருக் கத்தோலிக்கமக்களால் லூர்துமாதாவின் நூற்றாண்டுவிழா வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அன்றுகாலை அர்ச். அற்புதமரியநாயகி ஆலயத்தின் அருகே அமைந்துள்ள லூர்துகெபியில் பங்குக்கட்டளைக்குரவர் அவர்களால் திவ்வியபாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டது. பிற்பகல் 7 மணிக்குப்பெருந்திரளான கிறீஸ்துவர்கள் சமுகமாக மாலைஆராதனைபாடப்பட்டு, மாதாவின் திருச்சுரூப சுற்றுப்பிரகாரம் நடைபெற்று, அதன்மேல்திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதமும் அளிக்கப்பட்டது. பின்னர் கட்டளைக்குரவர் ஆங்கிலத்திலும், உதவிக் கட்டளைக்குரவர் தமிழிலும் பிரசங்கங்கள்நிகழ்த்தி, ஈற்றில் லூர்துமலைமாதாவின் திருச்சுரூபஆசீர்வாதத்துடன் விழாமுடிவெய்தியது.

## அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபை மாதாந்தக்கூட்டம் இம்மாதம் 22-ந் தேதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் சஞ்சூசையப்பர் சிற்றாலயத்தில் நடைபெறும்.

பகுதித்தலைவர்கள்சங்கம் 5 மணியளவில் நடைபெறும். தயவுசெய்து எல்லோரும் நேரத்தோடு சமுகங்கொடுக்குமாறு வேண்டுகிறேன்.

A. S. FRANCIS OF MARY,
சபைக்கர்த்தருக்காக

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, February 20-1958.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org